www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல்: 23 ஆனி 1991 அன்பளிப்பு: ரூபா 8



# தமிழர் தேசியம் பிரகடனம்

# தலைவர் பிரபாவின் அறைகூவல்


தமிழீழ மக்களுக்கு சுதந்திரமான, தனித்துவமான தேசியம் உண்டென்பதையும் அந்த தேசியத்தின் ஆட்சியுரிமைக்கு தமிழ்மக்கள் உரித்தானவர்கள் என்பதையும் வலியுறுத்தி தலைவர் பிரபாகரன் தமிழீழ தேசியத்தை பிரகடனம் செய்தார்

சிங்கள அரசு ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் சரி, தமிழீழ மக்களின் தேசியமானது என்றும் நிலையான, எவரும் மறுக்கமுடியாத, எதார்த்த அரசியல் உண்மை என்பதை பிரபாகரன் சர்வதேச உலகிற்கு எடுத்தியம்பினார். இந்த தேசியத்தை உறுதிசெய்யும் பகிரங்க அறிவிப்பாகவும் அத்தாட்சியாகவும் தேசிய தொண்டாற்றிய மாமனிதர்களுக்கு தலைவரால் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

இம் மாதம் (யூன்) 10ஆம் நாள்சரியாக சிறீலங்கா—தமிழீழப் போர் தொடங்கி ஓர் ஆண்டு பூர்த்தியாகிய நாளன்று சாவகச்சேரியில் நிகழ்ந்த முத்தமிழ் விழா வைபவத்தில், மக்கள் மத்தியில் தோன்றிய தலைவர் பிரபாகரன் தனது உரையின் முக்கிய அம்சமாக தமிழரின் தேசிய உரிமையை பிரகடனம் செய்து சிங்கள அரசுக்கு சவால் விடுத்தார்.



''தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசிய மா[க]ஆ வாழ்ந்துவந்தோம். தேசியமாகவே வாழ்ந்துவருகிறோம். தேசியமாகவே வாழப்போகிறோம். எமது தேசியத்தை எதிரியானவன் எற்றுக்கொண்டாலும் சரி, எற்றுக்கொள்ள மறுத்தாலும் சரி எமது தேசிய தனித்துவமானது என்றும் அழிக்கமுடியாத, எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்துகொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே,'' என்று தலைவர் பிரபாகரன் எடுத்துரைத்தார்.



ஓர் ஆண்டுகால தமிழ் மண்மீட்புப் போரில் மகத்தான இராணுவ சாதனைகளைப்புரிந்து, தமிழீழத்தின் பெரும் பகுதி நிலப்பரப்பை விடுதலைப்புலிகளின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து, மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த பெருமிதத்துடன், முத்தமிழ் விழாவில் பிரசன்னமாகி தமிழர் தேசியத்தை அவர் பிரகடனம்செய்தமை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

தமிழீழ மக்கள் ஒரு தேசிய அமைப்பைக் கொண்டவர்கள் என்பதற்கும், அவர்களுக்கு தேசிய தன்னாட்சி உரிமை உண்டு என்பதற்கும் சிங்கள அரசின் அங்கீகாரம் தேவையில்லை என்பதையே பிரபாகரன் தெட்டத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழர் தாயகமும், தமிழரின் தன்னாட்சி உரிமையும் போராடி வென்றெடுக்கப்படவேண்டியவை என்பதை தலைவர் வலியுறுத்தியிருப்பதோடு தமிழீழ மக்கள் தேசிய உணர்வோடு, தேசிய இனமாக ஒன்றுபட்டு உறுதிபூண்டு வாழ்ந்தால்தான், எமது தேசிய மண் ஒரு சுதந்திர பூமியாக, ஒரு சுதந்திர அரசாக பிறப்பெடுக்கும் என்பதையும் எடுத்துரைத்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்புக்கு தலைவர் மதிப்பளித்து பாராட்டியமை பரந்துபட்ட வெகுசனத்திற்கு பெரும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்திருக்கிறது.

' எமது மக்கள் போற்றப் படவேண்டியவர்கள், கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாகவிருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதிபடைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும். நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பழுவை பொதுமக்களே சுமந்து வருகிறார்கள் சாவும் அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தை சொற்களில் சித்தரிக்கமுடியாது.'' என்றார் தலைவர்.



தலைவரால்
வழங்கப்பட்ட
ஒரு பவுண் அளவுடைய
தமிழீழத் தேசிய விருது

தமிழீழ மக்களின் ஆன்ம உறுதியை உடைப்பதே சிங்கள அரசின் கபட நோக்கம் என்பதைச் சுட்டிக்காட்டிய பிரபாகரன், '' உலகின் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுமக்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட பொதுமக்களின் ஆன்ம உறுதியை உடைக்கவேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபொழுதும் வெற்றியளிப்பதில்லை,'' என எடுத்துரைத்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க.)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## ராஜீவ் காந்தி மரணம்;

## ஏன் இந்தக் குற்றச்சாட்டு?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி மரணமாகக் காரணமான குண்டுவெடிப்புடன் புலிகள் இயக்கத்தைத் தொடர்புபடுத்தி இந்தியாவிலிருந்து பலகுரல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன.

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகரும் ராஜீவ்காந்தியின் இறப்புக்கு விடுதலைப்புலிகள்தான் காரணம் என்று கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை இலண்டனில் வைத்தும், யாழ்ப்பாணத்தில் வைத்தும் நாம மறுத்துள்ளோம்.

ஆதாரங்களையோ சாட்சிகளையோ எடுத்துக்காட்டாமல் எழுந்தமானமாக குற்றச்சாட்டுக்களை அள்ளிவீசுவது பண்பற்ற, பொறுப்பில்லாத செயல் என்பதில் எவரும் கருத்துவேறுபாடு காட்டமாட்டார்கள்.

இந்திய சரித்திரத்தில் - அதன் தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் - பலர் ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களது கொலைக்குக் காரணம் இந்திய மண்ணில் நடந்த அரசியல் பிரச்சனைகள்தான்.

இந்தியா-பல தேசிய இனமக்களை தன்னகத்தே கொண்ட - ஒருபெரிய நாடு. இது சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இனப்பிரச்சனைகளையும், உரிமைப்போராட்டங்களையும் அடுத்தடுத்து சந்தித்து வந்துள்ளது. இதன் விளைவாக இந்திய ஆட்சிப்பீடத்திற்கு எதிராக பல அமைப்புகள் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கின- மணிப்பூர், சிக்கிம், நாகலாந்து, ஆந்திரா, ஆசாம், பஞ்சாப், காஸ்மீர் என இந்தப் பட்டியல் நீண்டுசெல்கின்றது. இந்த மக்களெழுச்சியை அடக்குவதற்கு அவ்வப்போது இருந்த இந்திய ஆளுர்வர்க்கம் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இதனால் எண்ணற்ற அப்பாவி மக்கள் அழிக்கப்பட்டதுடன், ஏராளமான கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

முன்னாள் இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி கொல்லப்பட்டதும் இவ்விதமானதொரு நடவடிக்கையின் எதிர் விளைவே என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமராக இருந்த காலத்தில் ஆசாம், பஞ்சாப் காஸ்மீர் போன்ற பல உரிமைப்போராட்டங்களை இரத்தவெள்ளத்தில் அமிழ்த்த முயன்றார்.

தனது நாட்டின் சொந்த நாட்டுக்குரிய குடிமக்களையே ஈவிரக்கமின்றி ராஜீவின் படைகள் சுட்டுக்கொன்றனர். இந்தியப் பெண்களையே இந்தியச் சிப்பாய்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தி கொடூரம் புரிந்தனர்.

இந்தப் படுபாதகச் செயல்களுக்காக ராஜீவ்காந்தியைக் கொல்வதற்கு பல தடவைகள் முயற்சிகள் நடந்ததுஎன்பது உலகறிந்த உண்மை. இந்த முயற்சிகளுடன் புலிகளை எவரும சம்பந்தப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட பின்னர் பஞ்சாப் - காஸ்மீர் தீவிரவாத இயக்கங்கள் வெளியிட்ட அறிக்கையில் ''ராஜீவ் கொலை செய்யப்பட வேண்டியவரே'' எனப் பகிரங்கமாகத் தமது கருத்தை தெரிவித்தும் இருந்தன.

இது ஒரு புறமிருக்க இந்துசமுத்திரப் பிராந்தியத்தை யார் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது தொடர்பாக பிராந்திய உலக வல்லரசுகளின் குழிபறிப்புக்களும் மறைமுகமாக இங்கே நடைபெறுகின்றன.

இவ்விதமாக உள்ளும் - புறமும் ராஜீவின் மரணத்துக்கு பலமான காரணிகள் இருக்க - இந்தக்குண்டு வெடிப்புக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என அறிவித்த பின்பும் புலிகள்மீது குற்றத்தைச் சுமத்த அவர்களைத் தூண்டும் காரணிகள் என்ன?

இதற்குரிய பதிலை இந்திராகாங்கிரஸ் கட்சி உட்பட, இந்திய ஆளும் வர்க்கமும் அறிந்தே வைத்திருக்கின்றது. ஆனால் அதைப் பகிரங்கமாகச் சொன்னால் ராஜீவ்காந்தியின் உண்மைத் தோற்றம் அம்பலமாகிவிடும் என அஞ்சுகிறார்கள் போலும்.

தமிழீழத்தின் மீது இந்தியப்படைகளை ஏவிவிட்டதும் பல்லாயிரக் கணக்கான தமிழீழமக்களைக் கொன்றொழிக்கக் காரணமானதும்.

கனிந்து வந்த விடுதலைப் போராட்டத்தையும் தமிழ்த் தேசியத்தின் தலைமைச் சக்திகளையும் அழிக்க முயன்றதும்.

மொத்தத்தில் தமிழின அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதும் தான் சந்தேகம் ஏற்பட முக்கிய காரணங்களாகும்

உறுதிமிக்கதும், யாருக்கும் அடிபணியாததொரு தலைவனால் வழிநடாத்தப்பட்டு சொந்த இரத்தத்தால் உறுதிபெற்று வளர்ந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தனது அரசின் வல்லாதிக்க நலனுக்குப் பயன்படுத்தமுடியாது என்பதைக் கண்டுணர்ந்த ராஜீவின் அரசு தமிழீழவிடுதலைப் போராட்டத்தை நசுக்க முயன்றது.

எமது வரலாற்று எதிரியான சிங்கள ஆளும் வர்க்கத்துடன் கைகோர்த்தபடி இந்திய, இலங்கை ஒப்பந்தம் என்ற விலங்கை தமிழீழத்தின்மீது வீசிஎறிந்தது.

அந்த ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருக்காத ஒரு முக்கிய பகுதியாகிய ''புலிகள் அழிப்பு'' வேலையை கனகச்சிதமாக ஆரம்பித்து தமிழ்த் தேசியத்துக்கு துரோகமிளைத்தது.

'புலிகளிடம் ஆயுதக் களைவு'' என்ற போர்வையில் தமிழீழ மக்கள் மீதும் அதன் பாதுகாவலர்கள் மீதும் ராஜீவின் அரசு போர் தொடுத்தது.

இந்தியா! நீயுமா? என தமிழீழ மக்கள் வாய்பிளந்து அதிர்ச்சியுடன் அண்ணார்ந்து பார்த்துநிற்க அவர்கள் ராஜீவின் படைகளினால் கொன்று குவிக்கப்பட்டார்கள். திறந்தவிழி மூடாமலேயே அவர்கள் இறந்துபட்டார்கள்.

சிங்களப்படைகளினால் அணுகமுடியாத எமது மக்களின் இருப்பிடங்களை, சொத்துக்களை இந்தியப் படைகள் எரித்துச் சிதைத்தன. ஆதரவற்றிருந்த எமது மக்கள்மீது அருவருக்கத்தக்க விதத்திலும் மிருகத்தனமாகவும் இனப்படுகொலை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இந்த இனக்கொலையை நிறுத்தி எமது மக்கள் இறந்துபடுவதைத் தடுக்கும்படி அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியிடம் பலதடவைகள் எமது இயக்கமும், எமதுமக்களும் வேண்டுகோள் விடுத்தபோதும் அது எள்ளிநகையாடப்பட்டது. இறுமாப்புடன் பதில் வழங்கப்பட்ட நிலையில் தமிழின அழிப்புக்கு ராஜீவ்காந்தி அனுமதி வழங்கினார்.

வீரத்தையும் தியாகத்தையும் உறுதியையும் அணிகலன்களாகக் கொண்டு தன்னந்தனியாக நின்று பெரும்பலத்துடன் இருந்த இந்தியப் படையுடன் மோதி எம்மைத் தற்காத்துக் கொள்ளத்தொடங்கினோம்.

எமது மக்களின் இதயத்திற்குள் இருந்தபடியே படிப்படியாக ஆக்கிரமிப்பாளர்களைத் தாக்கத்தொடங்கினோம்.

எங்களினதும் எங்களது மக்களினதும் உறுதியினால் இந்திய அதிகாரவர்க்கத்தினது இராணுவ மமதைக்கு பலத்த அடியொன்று கொடுத்தோம்.

புலிகளை அடக்கியாளலாம் என்ற அவர்களது நம்பிக்கையை ஆட்டங்காணச் செய்தோம்.

ஈற்றில் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தமிழீழ மண்ணிலிருந்து அகன்றனர்.

போர்வெறியுடன் இந்தியப்படைகள் தமிழீழத்தைக் கடித்துக்குதறி 28 மாதங்களிலும் அதாவது 895 நாட்களிலும்.

★ நாளொன்றுக்கு 8 தமிழர்கள் என்ற விகிதத்தில் 7000 தமிழீழப் பிரசைகள் ராஜீவின் படையால் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

☆ நாளொன்றுக்கு 56 வீடுகள் என்ற விகிதத்தில் 50.000 தமிழீழ மக்களின் குடியிருப்புகள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

★ பல்லாயிரம் குழந்தைகள் அனாதைகள் ஆக்கப்பட்டு அன்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

✶ பலநூற்றுக்கணக்கான தமிழீழப்பெண்கள் ரஜீவின் படைகளினால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

★ பலநூற்றுக்கணக்கில் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர்.

★ பொம்மை அரசொன்றை நிறுவமுயன்று அதற்குப் பலிக்கடாக்களாக்கியதன் மூலம் பலநூற்றுக்கணக்கான தமிழீழ இளைஞர்களின் வாழ்க்கையைச் சிதைக்கக் காரணமாகியுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இரத்தக்களரி நிறைந்ததும், துரோகம் நிறைந்ததுமான அத்தியாயம் இந்திய அரசின் நேரடித் தலையீட்டால் ஏற்படுத்தப்பட்டது.

இதற்கெல்லாம் காரணம் இந்திய முதலாளித்துவ அரசினதும் அதன் ஆளும் வர்க்கத்தினதும் ஏகபிரதிநிதியாக அப்போதிருந்த ராஜீவ் காந்திதான்.

இவ்விதமாக தமிழீழமக்களை இனப்படுகொலைக்குள்ளாக்கி அவர்களது தேசிய எழுச்சியைக் கருவறுக்க முயன்றதற்காக புலிகளினால் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டிருக்கலாம் என ஊகித்தே இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர். ஆனால் இந்தப் பின்னணியை பகிரங்கபபடுத்தி தமது ஊகத்திற்கான காரணத்தைக் கற்பிக்க இந்திய ஆளும்வர்க்கமும், பத்திரிகை உலகமும் தயங்குகின்றன.

இதேவேளை புலிகள்மீதான இக் குற்றச்சாட்டுக்கு பலமான அரசியல் காரணிகளும் இருக்கின்றது.

ராஜீவ் — ஜெ ஆர் ஒப்பந்தம் செயலிழந்ததும் இந்திய இராணுவத் தலையீடு தோல்வி கண்டதும தனது வல்லாதிக்கக் கொள்கைக்கு சாவுமணி அடிக்கப்பட்டதைப்போல இந்திய ஆளும்வர்க்கம் உணர்ந்தது.

இதனால் புலிகள்மீது வெறுப்பும் சினமும் அடைந்தது.

அதேசமயம் தமிழீழ - இந்திய போரின் புலிகள் அடைந்த வெற்றியினால் அடக்கப்பட்ட தேசிய இனங்கள் மத்தியில் குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் மதிப்பிற்கும், பின்பற்றுதலுக்கும் உரிய மாபெரும் சக்தியாக உருவாகி வருகின்றார்கள்.

இந்தியாவில் உரிமைப்போராட்டங்களை நடாத்திவரும் தேசிய இனங்கள் மத்தியில் இதுவரைகாலமும் இருந்துவந்த சிந்தனையிலும், மனோநிலையிலும் புலிகளின் வெற்றி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, இந்தியப்படை மாபெரும் படை என்றும அதனுடன் மோதி வெற்றிகாண்பது சாத்தியமற்றது என்றிருந்த அவநம்பிக்கையும் அச்சமும் புலிகளின் வெற்றியால் இல்லாமல் போயிற்று. இந்த உணர்வுகள் எதிர்காலத்தில் இந்தியாவின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு வேட்டு வைத்துவிடும் என்று இந்திய ஆளும்வர்க்கம் அஞ்சுகின்றது. எனவேதான் அடக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு விடிவெள்ளியாகப் புலிகள் இயக்கம் மாறுவதை தடுக்கும் நோக்குடன் புலிகள் இயக்கத்திற்கெதிராக பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு அதன்மீது சேற்றைவாரி வீசியது

புலிகளை ஒரு இந்திய விரோத சக்தியாக காட்டி இந்திய மக்கள் மத்தியில் புலிகள் இயக்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த முனைந்து வந்திருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்டிருக்கிறார் எனவே இந்தக் கொலைக்குரிய பொறுப்பை புலிகள் மீது சுமத்துவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அதேசமயம், ராஜீவின் சாவுக்குச் சில வாரங்கள் முன்னர் எமது இயக்கத்தின் பிரதிநிதி ஒருவர் ஈழத் தமிழர் பிரச்சனைபற்றி ராஜீவுடன் கலந்து பேசியிருக்கின்றார்.

இந்தச் செய்தியை இந்தியாவில் இருந்துவரும் ''இந்து'' பத்திரிகையும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தது.

இந்தச் சந்திப்பு உண்மையானதுதான். ஆனால் ராஜீவ் இறந்த பின்னர் இந்தச் சந்திப்பை இ. காங்கிரஸ் பிரமுகர்கள் (பிரணப்முகர்ஜி, வாழப்பாடிராமமூர்த்தி) மறுத்துள்ளனர்.

இது எம்மைக் குற்றஞ்சாட்டுபவர்களின் நேர்மையின்மையையும், கபடசிந்தனையையும் துலாம்பரமாகக் காட்டுகின்றது.

www.eelamview.com

www.eelamview.com



# இன்னொரு உலக அதிசயம்

"கரும்புலிகள்" என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்தி மிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலை புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள் உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத் தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம்புகும் இக்கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத்திறன்களில் இருந்து மிக உச்சப்பயன்களைப் பெற்றாலொளிய போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்தமுடியாது.

எனவே ஒடுக்கு முறையாளர்களின் நாடியை ஒடுக்கச் செய்யும் அளவுக்கு பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச்சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர்வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவமதான் கரும்புலித்தாக்குதலாகும்.

சிறீலங்கா அரசும், புலிகளை அழித்துவிடலாம் என திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதே சமயம் அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன் அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழப்பியும், போராட்ட வெற்றியில நம்பிக்கையிழக்கக்கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில் தான் ஒரு கரும்புலித்தாக்குதலை நடாத்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

# கரும்புலிகள்

ஈடு இணையற்ற இவர்களது தியாகமும், மன ஓர்மமும் சமுதாயத்தில ஏற்படுத்தப் போகும் தாக்கம் எத்தகையது? — என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகி விட்டன.

இன்று, உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க விழையும் மக்களை மிகைத் தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர்.



10.07.1990 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கரும்புலித் தாக்குதலை நடாத்தி வீரமரணமடைந்த மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகிய கடற்கரும்புலிகளுடன் தலைவர் பிரபாகரன்.

இவர்களிடம் ஆள்- ஆயுத பலமுண்டு.

ஆட்சி அதிகாரமுண்டு. தொழில் நுட்பவலுவுண்டு இவற்றை தேவைப்படும் இடங்களுக்கு, தேவைப்படும் நேரத்தில் கொடுத்துதவி, போராட்ட சக்திகளைப் பலமிழக்கச் செய்து, தங்களது அடக்கு முறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்கு முறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு ஆள் - ஆயுத - தொழில் நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலமிக்க ஒரு இலக்கை அழிக்கக் கூடிய ஒரு படையணியொன்றை அமைக்கும் யோசனையை தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டுள்ளார். அந்த எண்ணக்கருவை செயற்படுத்தக் கூடிய ஆற்றலை புலிவீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார்.

1981ம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டிருந்த பொழுது தற்கொலைப்படை அணியொன்றுக்குத் தானே தலைமை தாங்கிச்சென்று அவர்களை மீட்டுவர பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பலவேறு காரணிகளினால் தவிர்க்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் "ஒப்பறேசன் லிபறேசன்" என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப்படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. அதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல்ரீதியான போரிட www.eelamview.com கூடியது.

1987ம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து அம் முகாமை சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச்செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தான்.

அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதலை நிகழ்த்திவிட்டோம். அதில் எட்டுக் கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும் வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில் தான் இருக்கின்றார்கள். ஆனால தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும்போது கூட திரும்பி வருவன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒரு புலி வீரன் செல்கின்றான். சில வேளைகளில் அங்கே அவன் சாவைச்சந்திக்கலாம் அல்லது திரும்பி வரலாம்.

ஆனால் கரும் புலிகளின் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னரேயே தங்களுடைய சாவை தெரிந்து கொண்டு விடுகின்றார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகின்றேன் என்ற உண்மையை பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தை தங்களுடன் கொண்டு செல்லுகின்றார்கள்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளைக் கருத்திலெடுக்காது, உடைந்து நொருங்கிப் போய்க் கிடக்கும் பாதை வழியே சீராக நிதானமாக வெடி மருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து தன்னையும் சேர்த்து வெடிக்கச்செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# லெப். கேணல் சந்திரன்




சந்திரன்,

உன்னை நாங்கள் மறந்து விடுவோமா?

இல்லை, அது எங்களால் முடியாது. உன்னை மட்டுமல்ல. உன்னைமாதிரி இந்த மண்ணை நேசித்து,

இந்த மண்ணுக்கு உயிர் தந்த எவரையுமே எங்களால் மறக்க முடியாது. சந்திரன், உன்னை, உனது உணர்வுகளை மறக்கமுடியாமல் நாங்கள் மட்டுமா தவிக்கின்றோம். இல்லை.

புதரிகுடாவில் காற்சட்டை இல்லாமல், உன்னைக்கண்டு தாவும் சிறுவர்களும், பொன்நகரிலும், முள்ளியவளையிலும் உரலுக்குள் பாக்கிடித்தபடியே விழிகளால் உன்னைத் தேடும் கிழவிகளும், களைத்து விழுந்து வரும் உன்னை,

தடவி, உற்சாகமாக வழியனுப்பும் நிழல் மரங்களும், உன்னைக் காணாமல் உன்னை விழுங்கிய கடலலைகளைப் போலவே குமுறிக்கொண்டிருக்கிறார்கள்.

சந்திரன், நீ முல்லைத்தீவுக்கு வரும்பொழுது ஒரு சின்னப் போராளி.

நீ கறுப்பாக இருந்தாலும் அழகாக இருப்பாய். கண்ணாடிகளுக்குள்ளாகத் தெரியும் உனது கண்களில் அன்பும், கனிவும் இருக்கும். சில நேரங்களில் கோபமும் தெறிக்கும்.

சந்திரன், நீ அடிக்கடி சொல்வாய்,

"நான் ஏழைக்குடும்பத்தில்தான் பிறந்தனான். வயலில் கூலிவேலை செய்துதான் நாங்கள் வாழ்ந்தனாங்கள்" என்பாய். உண்மைதான். அதனால்தான் ஏழைகளை நேசிக்கும் இதயத்தைப் பெற்றுக்கொண்டாய். அதனால்தான் எப்பொழுதுமே ஏழை மக்களுடன் கூடவே கலந்துவிடுவாய்.

ஒருமுறை, புதரிகுடா என்ற கிராமத்திற்கு நாங்கள் போயிருந்தோம். வயற்கரை ஓரங்களில் சிறு கொட்டில்களைக் கட்டி அங்கு சில குடும்பங்கள் இருந்தன. கூரைகள் பிய்ந்து போயிருந்தன. மழையிலும், வெயிலிலும் அவர்கள் நனைந்துகொண்டுதான் இருந்தார்கள். விழிகளில் ஏக்கத்துடன், வெறும் மேனியுடன், நோயினால் வீங்கிய வயிறுகளுடன் இந்த மண்ணின் குழந்தைகள் எங்கள் முன்பு நின்றார்கள்.

நீ தவித்தாய்.

அவர்கள், பலநாட்களாக குளிக்கவில்லை என்றார்கள். தண்ணீர் அள்ளவேண்டாம் என்று பக்கத்து வளவுக்காரன் தடுத்துவிட்டான். குடிப்பதற்குக்கூட தண்ணி இல்லை என்றார்கள்.

அவனைக் கேட்டு

உனது தவிப்பும், உன்னிடம் தோன்றிய கோபமும் எங்களுக்கு நன்றாகவே தெரிந்தது. அந்த ஏழை மக்கள் இந்த மண்ணில் பண்பார்களாக வாழவேண்டும். அவர்களுக்கென்று இந்த மண்ணில் சொந்த நிலம், தொழில், மகிழ்ச்சிகரமான வாழ்வு எல்லாமே தோற்றுவிக்கப்படவேண்டும் என நீ தீர்மானித்துக்கொண்டாய். உண்மையில் நீ செய்யாமல் சொன்னது மாதிரி அதுவும் ஒரு போர்முறைதான்.

நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமல் ஊருக்குள் காடாய் இருந்த உடையார் ஒருவரின் பெரும் நிலம் அவர்களுக்கு சிறிய பகுதிகளாகச் சொந்த நிலமானது. புதிய அழகான மண்வீடுகள் அவர்களுக்குச் சொந்தமானது.

அந்தக் கிராமத்திற்கென்று பாலர்பாடசாலையை ஆரம்பித்தபோது, உன்னுடன் நாங்களும் அங்கே நின்றோம். நீ அவர்களுக்கு புதிய ஆடைகளைக் கொடுத்திருந்தாய். பத்துப் பன்னிரண்டு வயசு தொடக்கம் ஆறுவயசு வரை எல்லாக் குழந்தைகளும் பாலர் வகுப்பில் படிப்பதற்கு வந்திருந்தார்கள். அது ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இனி அந்தக் கிராமம் தனக்கென ஒரு வாழ்வைக் காணும் என்பது அன்று வெளிப்பட்டது.

தென்றில்லை. நீ உருவாக்கிய இன்னொரு கிராமமான பொன்னகர், நாவற்காடு உன்னைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொண்ட முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு, பாண்டியன்குளம் பனங்காமம் ஏன் வன்னி முழுவதுமே உன் நினைவுகளைச் சொன்னபடி நிற்கின்றன.

சந்திரன், உனது உள்ளம் சிலவேளைகளில் தாயன்பைத் தேடி அழுவதுண்டு. நீ உனது அம்மாவில் எவ்வளவு அன்பு வைத்திருந்தாய் என்பது எங்களுக்குத் தெரியும். உன்னுடைய சோகம் நிறைந்த இளமைக்காலத்தை, நீ வேலைகளினூடே சொல்வதுண்டு.

அந்தக்காலங்களில் எங்கள் முன் கடுமையான வேலை

கொண்டு உனது அம்மா எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பாள். இப்பொழுதெல்லாம் உன்னுடைய அம்மா உனது படத்தை வைத்துக்கொண்டு விம்மிக்கொண்டிருக்கிறாளாம்.

சந்திரன், நீ முள்ளியவளையில் அரசியல் வேலை செய்யும் பொழுது, சில நேரங்களில்...... இரவில் உன்னைத் தேடி நாங்கள் வருவதுண்டு. இரவில் சோகமான பாடல் கேட்கும் வீட்டில் உன்னை நாங்கள் காணுவோம். நீ விழித்திருப்பாய். "இந்த விடயம் ஆமிக்காரனுக்குத் தெரிந்தால் பாட்டுக்கேட்கிற வீட்டில வந்து உனைப் பிடிக்கப்போறாங்கள்" என்று நாம் ஏசுவோம். நீ சிரித்துக் கொண்டே சரிந்து படுப்பாய். விடிந்ததும், நாங்கள் எதையாவது சாப்பிட்டுக் கொண்



வன்னிப் பிராந்திய
அரசியல் பொறுப்பாளர்
லெப். கேணல் சந்திரன்
(இரா. முத்துலிங்கம்)
4ம் வாய்க்கால், கிளிநொச்சி
பிறப்பு. 13. 4. 1964
வீரமரணம் 29.9.90

சத்திரசிகிச்சை பெற கடற்பயணம் போனவர்களும், அவர்களைக் கூட்டிச் சென்ற கடற்புலிகளும், எமது உதவியாளர்கள் இருவருமாக, எமது 15 தோழர்கள் வீரமரணமடைந்தனர்.

சில நாட்கள் சென்றன. அந்தக் கிராமத்தவர்களுக்கு புதரிகுடா என்ற பெயர் பிடிக்கவில்லையாம். அதனை சந்திரபுரம் என மாற்றிவிட்டார்கள். அதனைக் கேட்க எங்களுக்குச் சிரிப்பாக இருந்தது. உனக்குக் கோபமாக இருந்தது.

நீ ஏசினாய். இனி அப்படிச் சொல்லக்கூடாது என்றாய். ஆனால், சந்திரன் நீ உயிரோடு இருக்கும்பொழுதும், உன் மரணத்தின் பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை. நீ அதற்குப் பின் எவ்வளவோ பெரிய பெரிய பொறுப்புகளிலெல்லாம் இருந்திருப்பாய். ஆனால் நீ தடம் பதித்துச் சென்றது இங்குதான். உன் நினைவுகள் ஆழமாக வேரூன்றிப் போனதும் இங்குதான்.

சந்திரன், உன் நினைவுகளைச் சொன்னபடி சந்திரபுரம் மட்டும்தான் இருக்கிற

கள் நின்றன. நீ முழிந்து — கஸ்டப்பட்டு வேலை செய்வாய். நாங்கள் வியந்து நிற்போம். "நான் சின்ன வயசிலேயே வயலுக்கை நின்றனான்" என்பாய் நீ. உன் விழிகளில் ஏதோ ஒரு ஏக்கம் தெரியும்.

"அண்ணன்மாருக்கும் எனக்கும் சேர்த்து அம்மா பழஞ்சோறு ஊட்டித் தருவா" என்பாய் நீ. உன் விழிகளை நாங்கள் பார்ப்போம். நீ வேறெங்கோ பார்த்துக்கொண்டிருப்பாய்.

சந்திரன், நீ கிளிநொச்சியில் தான் பிறந்தனி. ஆனால் உனது அம்மாவும், அப்பாவும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். உனது அப்பா சாகும்பொழுது உனக்கு இரண்டு வயசாம். உனது இரண்டு அண்ணன்மாரும் சின்னப்பிள்ளைகள். உங்கள் மூன்று பேரையும் வைத்துக்

டிருப்போம். நீ வீடு வீடாக வேலிகளுக்கு மேலாகப் பழைய சோறு தேடித் திரிவாய். அதற்காக நீ வெட்கப்படுவதுமில்லை. ஏனென்றால் அங்கிருக்கின்ற எல்லா வீட்டிற்கும் நீ பிள்ளை மாதிரித்தான். உனக்கு சாப்பாடு தரவேண்டும் என்பதற்காகவே அவர்கள் இரவில் சோற்றை மிச்சம் வைப்பதுண்டு. சந்திரன், இன்றைக்கும் அந்தச் சனத்தினுடைய இதயத்தில், நீ இருக்கிறாயடா!

சந்திரன், நீ அரசியல் பேசுவதை நாங்கள் கேட்பதில்லை. சில நேரங்களில் பார்த்திருக்கிறோம். ஏதாவதொரு வீட்டின் முற்றத்தில் ஒரு கல்லின் மேல் நீயிருப்பாய். தங்கள் வீட்டுக்கதைகளைச் சொல்லிக்கொண்டே அந்த வீட்டுக்காரரும் முன்னாலிருப்பார்கள். அப்பொழுதுதான் — நீயும் இந்த

மண்ணின் நிகழ்வுகளைச் சொல்லிக் கொண்டிருப்பாய். தமிழீழ மண்ணின் சோகங்களைச் சொல்லிக்கொண்டிருப்பாய். அவர்கள் எவருக்குமே தெரியாது அவர்களுக்கு நீ அரசியல் படிப்பிக்கிறாய் என்று. கதைத்து முடித்தபின்பு "இந்த மண்ணின் விடுதலைக்காக எல்லோரும் போராடத்தான் வேண்டும்," என்பார்கள்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரதேசத்திற்கு நீ அரசியல் வேலை செய்வதற்கு வந்து இரண்டு வருடங்கள் சென்றன. இந்தக் கால இடைவெளியில் உன்னிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது. எதற்கெடுத்தாலும் கோபப்படும் உனது இயல்பும் மாறி இருந்தது. முல்லை திவு பிரதேசத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. உனதும் - உனது தோழர்களதும் கடுமையான உழைப்பு,

தேசவிரோத சக்திகளின் பிடியிலிருந்து மக்களை விடுவித்து தங்கள் மண்ணின் விடுதலையைப்பற்றி மக்களை சிந்திக்க வைத்தது. அந்த விடுதலைக்காக மக்களை போராடத் தூண்டியது.

சந்திரன் உனக்குத் தெரியும். அந்த நேரங்களில் தான். இந்தியப்படை எம் தேசத்தின் மீதொரு யுத்தத்தை நடாத்தியது. நாங்கள் தெருக்களில் நடக்க முடியாமலும் - கிராமங்களில் நிற்க முடியாமலும் இருந்த நேரமது.

இரவு நேரங்களில் காடுகளிற்குள்ளும் - காட்டுக் கரையோரங்களிலும் தான் நாங்கள் படுப்போம். ஆபத்தை எதிர்பார்த்தபடியே இரவின் அச்சத்தில் பசித்த வயிற்றுடன் இருக்கும் எங்களை நீதான் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பாய். நாட்கள் செல்லச் செல்ல, ஆபத்து நிறைந்த அந்த இரவுகளே இனிமையான இரவுகளாக எங்களுக்கு மாறிவிட்டது. சந்திரன், எங்களின் எல்லாத் தோழர்களும் சொல்வார்கள். கஸ்டமான அந்த நாட்களும், அந்த நினைவுகளும் தான் இன்னும் எங்கள் மனங்களில் பசுமையாக படிந்துபோய்க் கிடக்கிறது என்பார்கள்.

சந்திரன், நீ அரசியல் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தாலும், தாக்குதற் களங்களுக்கு செல்வதற்கும் தவறுவதில்லை. உன் கைகள் எதிரிக்கு எதிராக பல முறை துப்பாக்கிகளை இயக்கியிருக்கும்.

இந்தியப் படைகளுடன் நெடுங்கேணியில் நடந்த சண்டை ஒன்றில் நீ கழுத்திலும் கையிலும் காயமடைந்திருந்தாய். களத்தில் ஆயுதங்களை கைப்பற்ற முன்னேறிய போது நீ காயமடைந்ததாக உன் தோழர்கள் சொன்னார்கள்.

நீ எமது முகாமில் சாய்மனைக் கட்டிலில் சாய்ந்திருந்தாய். உன் கழுத்தில் சிக்கிய துப்பாக்கி ரவை உன்னை வேதனைப்படுத்தியது. நீ அதைவிட அதிகமாக பாவனை (நடிப்பு) செய்தாய். உன் பாவனைகளை எங்கள் தோழர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். எங்காவது ஒரு மூலையிலிருந்து ஒரு தோழன் உன்னை அழைப்பான்.

நீ கழுத்தைத் திருப்ப முடியாமல் உடல் முழுவதையும் திருப்பி அவனைப் பார்ப்பாய்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com



# உற்பத்தி போர் முனையில் புலிகள்

பெரும் நிலப்பகுதி எமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வடதமிழீழத்தில் சிறிலங்கா பொருளாதாரத்தடையை விதித்துள்ளது. தமிழீழ மக்களை உடல், உளரீதியாக தளர்ச்சி அடையச் செய்வதே இதன் நோக்கமாகும்.

உணவு இல்லாமையால் மக்கள் போராட்டத்திற்கு எதிராக மாறுவார்கள் எனக் கணிப்பிட்டனர்.

தமிழீழ மக்களின் போராட்டத்தின் மேல் உள்ள உறுதியையும், தமிழீழமக்களின் உழைப்பையும், தமிழீழத்தின் வளத்தையும் சிறிலங்கா கணக்கிலெடுக்கத் தவறி விட்டது.

சிறிலங்கா அரசு கணக்கில் எடுக்காத பக்கங்களை பயன்படுத்தி நாம் உற்பத்திப் போர்முனையில் களமிறங்கினோம். ஓரளவில் வெற்றியும் பெற்றோம்.

வட தமிழீழத்தில் சாதாரண நிலையில் உற்பத்தி செய்யப்படும் அரிசி எமது தேவைக்குப் போதுமானதே.

வட தமிழீழத்தில் ஒரு குறுகிய பகுதியில் மக்கள் செறிந்து வாழ்வதே உற்பத்தியில் எமது வளர்ச்சியை பெரிதும் தடுக்கும் ஒரு காரணியாகும்.

| மாவட்டம் | நெல். உற் மெ. தொ | நில. பரப்பு ச. கி. மீ | தமிழ் மக். தொகை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 16670 | 983.6 | 825376 |
| கிளிநொச்சி | 77325 | 1088 4 | 102000 |
| மன்னார் | 76694 | 2002 | 83590 |
| வவுனியா | 40174 | 2645 | 115976 |
| முல்லைத்தீவு | 45243 | 1966 | 86304 |

76694 மெ. தொன் நெல் விளையும் மன்னாரில் இன்று 50,000 க்கு குறைவாகவே மக்கள் வாழ்கின்றனர்.

ஒரு மனிதனுக்கு நாளொன்றிற்கு 2500 கலோரி சக்தி தேவை. நாளொன்றிற்கு 326.3 கிராம் காபோவைதரேற்று 60 9 கிராம் புரதம், 67.2 கிராம் கொழுப்புத் தேவை.

ஒரு மனிதனின் தானிய நுகர்வு வருடமொன்றிற்கு அரிசி 102 கிலோ. கோதுமை 29 கிலோவாகும். கோதுமைக்கு மாற்றீடாக உள்ளூரிலையே நாம் உற்பத்தி செய்ய முடியும்.

ஆனால், எதிரியின் பொருளாதாரத் தடை பல பாதக விளைவுகளை ஏற்படுத்தியது. சென்ற வருட கால போக நெல் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. மன்னார், வன்னி மாவட்டங்களின் புள்ளி விபரங்கள் இதனை விளக்கும்.

| | செய்யக் கூடியது | 90 இல் செய்யப் பட்டது (ஏக்கர்) |
|---|---|---|
| மன்னார் | 15000 | 3000 |
| வவுனியா | 17000 | 3300 |
| முல்லைத்தீவு | 10000 | 4700 |
| கிளிநொச்சி | 23500 | 19000 |

உள்ளீடுகள் பயன்படுத்தப்படாமையால் விளைச்சலும் பெரு வீழ்ச்சி கண்டது.

(யாழ்ப்பாணத்தில் வழமையாகச் செய்யப்படும் 11000 ஹெக்டயரில் நெல் உற்பத்தி நடந்தாலும் யாழ்ப்பாண மக்களின் இரண்டு மாதத் தேவைக்கே இது போதாது) இது ஓர் உதாரணம் மட்டுமே. வெளியிலிருந்து வரும் உணவுப் பொருட்கள் தடை உள்நாட்டில் பெரும் உற்பத்தி வீழ்ச்சி. எனவே பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் அபாயம் தோன்றியது. புதிய போர் முனை ஆரம்பிக்கப்பட்டது. நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டன. போராளிகளும், அனுபவம் முதிர்ச்சிபெற்ற விவசாயிகளும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்தனர்.

எமது மக்கள் தமதுணவில் சராசரி 50 % ற்கு மேல் மாப்பொருள் உட்கொள்கின்றனர். எனவே கோதுமை மாவிற்கு மாற்றாகவும் அரிசித் தட்டுப்பாட்டினை நீக்கும் முகமாகவும் 28% மாப்பொருள் கொண்ட மரவள்ளியும், சராசரி 25% புரதமும் 50% மேல் மாப்பொருளும் கொண்ட பாசிப்பயறு, கௌப்பி, உளுந்து போன்ற பருப்பு வகைகளும் 70% மேல் மாடபொருள் கொண்ட குரக்கன் போன்ற சிறுதானிய வகைகளும் உடனடியாக உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பயிர்கள் வறட்சியைத் தாங்கக் கூடியவை. செயற்கை உரம் தேவைப்படாதவை. மிகக் குறுகியகால விளைச்சலைத் தரக்கூடியவை. பயிர்ச்செய்கைக்காக வடமாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 67% மக்கள் வாழும் யாழ் குடாநாடு முதலில் தெரிவு செய்யப்பட்டது. இங்கு வழமையாகக் காலபோக நெல் உற்பத்தியின் பின் வயல் நிலங்கள் பெருமளவில் (11000 ஹெக்டயர்) வெறுமனையே விடப்படும். இம்முறை இவ் வயல் நிலங்கள் பெருமளவில் பயறு, கௌப்பி, எள்ளு போன்றவை பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உணவு உற்பத்தித்திட்டமொன்று மாவட்டத்திற்கெனத் தயாரிக்கப்பட்டது.

எண்ணெய் தட்டுப்பாட்டினை நீக்கும் முகமாக எள்ளு உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டது. எண்ணெய்க்கு மட்டுமன்றி மனிதரிற்கும் கால்நடைகளிற்கும் உணவாக இது பயன்படும். (எள்ளில் 18% புரதமும் 25 % மாப்பொருளும் 45 % கொழுப்பும் இருப்பது குறிப்பிடத்தக்கது) இதனைவிட வயல்களிற்கு உரமாகப் பயன்படுத்தக்கூடிய சணலும் ஊக்குவிக்கப்பட்டது. இதன் உற்பத்தி வெற்றியினை இப் புள்ளி காட்டும் இ புள்ளி விபரம் முன்னைய ஆண்டுகளைவிடப் பன்மடங்கு அதிகரிப்பினை விளக்கும்.

| பயிர்வகை | உற்பத்தி (அளவு) | முன்னைய ஆண்டுகளில் உற்பத்தி (அளவு) |
|---|---|---|
| 1. பாசிப்பயறு | 1600 (ஹெக்டயர்) | 203 |
| 2. கௌப்பி | 1060 (ஹெக்டயர்) | 120 |
| 3. உளுந்து | 170 (ஹெக்டயர்) | 60 |
| 4. சணல் | 350 (ஹெக்டயர்) | — |
| 5. எள்ளு | 1580 (ஹெக்டயர்) | 232 |

இதேபோல் இம்முறை சிறுபோகத்தில் வன்னியில் மிகக்கூடிய அளவு நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிதக்க வலுவையும் பாரம்பரிய விவசாய முறைகளையும் கையாண்டு நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் 6000 (ஹெக்டயரும்) நெற்செய்கை மேற்கொள்ள முயலப்படுகிறது. அதேபோல் பருப்பு வகைகளும் சிறுதானியங்களும் தலா 1000 ஹெக்டயரில் விதைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மன்னாரிலும், வவுனியாவிலும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் திட்டமிட்ட இலக்குகள் குறைந்து விட்டன. இவை எல்லாவற்றையும் விட மக்களிடையே பொதுவானதோர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நெருக்கடி நிலைக்கு ஏற்ப அவர்களைத் தயாரித்து தமது உணவின் ஒரு பகுதியைத் தாமே உற்பத்தி செய்யத் தூண்டிவிடப்பட்டது முக்கியமானதாகும். அதேபோல் அரிசியைக் குறைத்து கோதுமையைத் தவிர்த்து தமது உணவுப்பழக்க வழக்கத்தில் ஓர் மாற்றத்தினையும் மக்கள் ஏற்படுத்திக்கொண்டனர். பயறு, கௌப்பி, உளுந்து போன்றவற்றை ஒருநேர உணவாக ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டனர். இதனால் ஓர் நிறை உணவை அவர்கள் பெற முடிந்தது.

மேற்குறிப்பிட்டவையோடு சமாந்தரமாக விடுதலைப்புலிகளால் பொதுவான சந்தைக் கண்காணிப்பின் அடிப்படையில் உத்தரவாத விலைத்திட்டங்களுடன் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய கொள்வனவு விநியோக முறைகள் காரணமாக உணவு உற்பத்தியாளனும் நுகர்வோனும் சீரான நன்மையினைப் பெறக்கூடியதாக இருந்தது. நெல், கௌப்பி, உளுந்து, பயறு, மரவள்ளி இன்று சந்தையில் ஒரு நிரமான விலையினைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. (மரவள்ளி ஒரு கிலோ 15/= விற்குக் குறையாமலும் கௌப்பி, பயறு போன்றவற்றின் விலைகள் கிலோ 25/=களும் குறையாமல் இருக்கிறது.) அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ பயறு 30/= ஆகவும், கௌப்பி 28/= ஆகவும் கொள்வனவு செய்ய கூட்டுறவுச் சங்கங்களால் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக உற்பத்திப் போர்முனையில் முதற்கட்ட வெற்றிகள் பல காணப்பட்டுள்ளன. எத்தடையையும் வெல்ல முடியும் என்ற மனோவலிமையை மக்கள் பெற்றுள்ள அதேசமயத்தில் எத்தகையதோர் நெருக்கடி சூழ்நிலையிலும் ஓர் குறைந்தபட்ச உணவு ஊட்டங்களிற்கான தேவையைப் பேணமுடியும் என்ற நம்பிக்கையை நாம் பெற்றுள்ளோம்.




விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்ினரது மூன்றாவது ஒலிப்பதிவு நாடாவாகிய "பரணிபாடுவோம்" வெளியீட்டு விழா அண்மையில் நடந்து முடிந்துள்ளது.

கரும்புலிகளுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடாவில் மொத்தம் 10 பாடல்கள் இருக்கின்றன.

இந்த ஒலிப்பதிவு நாடா ஒரு விசேட அம்சத்தைக் கொண்டுள்ளது. இதில் உள்ள எட்டு பாடல்கள் எமது போராளிகளால் இயற்றப்பட்டவை என்பது முக்கியமானதொரு அம்சமாகும். ஒன்று ஒரு தேசபக்தத் தந்தையால் இயற்றப்பட்டிருந்தது.

எமது முத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் யோகி, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, லைப், சகாதேவன் ஆகியோருடன் வன்னிமண்ணைச் சேர்ந்த திரு செல்லக்குட்டி என்பவரும் இப் பாடல்களை இயற்றியுள்ளனர். திரு செல்லக்குட்டியின் இரண்டு புதல்வர்கள் போராட்டத்தில் இணைந்து வீரமரணமடைந்துவிட்டனர். ஒருவரான கமல இந்தியப்படைச் சண்டையின்போது யாழ்ப்பாணத்திலும், இன்னொருவரான லெப். சங்கர் சிலாபத்துறைத் தாக்குதலிலும் வீரமரணமடைந்துள்ளனர். தற்போது இவரது மகள் ஒருவர் இயக்கத்தில் இருக்கின்றார்.

இசைவிதமாக "பரணிபாடுவோம்" ஒலிப்பதிவு நாடா. மற்றைய எல்லா எழுச்சிப் பாடல் நாடாக்களையும் விட தனித்துவமாக இருக்கின்றது.

இந்த ஒலிப்பதிவு நாடா எதிர்காலத்தில் நிகழப் போகும் ஒரு பிரமாண்டமான-சமூகத்தக்கத்தை ஏற்படுத்த இருக்கும்-மாற்றத்தின் குறியீடாக அமைந்துள்ளது எனலாம்.

அதாவது உள்ளார்ந்த ரீதியாக விடுதலை உணர்வால் விழுங்கப்பட்ட போராளிக் கலைஞர்களினால் கலை இலக்கியங்கள் படைக்கப்படுவது அதிகரிக்க இருக்கின்றது.

இது கலை - இலக்கிய - பண்பாட்டு அரங்கிற்கு ஒரு புதுமையையும் செழுமையையும் கொடுக்கும் என்பது உறுதி. இந்த ஒலிப்பதிவு நாடா இதற்கு கட்டியம் கூறுகிறது.

இந்த ஒலிப்பதிவு நாடாவை வெளிக்கொணர்ந்த கலை, பண்பாட்டுக் கழகத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

www.eelamview.com

www.eelamview.com



# ஒரு வருடப் போர்

19 வருடகாலமாக நடந்துவரும் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்ட வரலாற்றில் கடந்த ஒரு வருடப்போர் என்பது பல திருப்பு முனைகளை ஏற்படுத்திய வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டிருக்கிறது.

இந்தப் போர் எமக்கு இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பிரமிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றுத்தந்திருக்கிறது. இந்த வெற்றிகரப் போக்கானது "தமிழீழ தேசம்" தொடர்பான உறுதியான நம்பிக்கையை மிகப்பெரும்பாலான மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. எதிரிக்கு தரையில் இருந்த கட்டுப்பாட்டை பெருமளவு தகர்த்தெறிந்துள்ளோம். கடலில் எதிரி வைத்திருந்த ஏகபோக உரிமையை மாற்றியுள்ளோம்.

இந்த ஒருவருடப் போரில் தமிழீழம் முழுவதும் 13 இராணுவ முகாம்களையும் 22 காவல் (பொலிஸ்) நிலையங்களையும் நாம் தகர்த்தெறிந்துள்ளோம்.

10-06-1990 அன்று தொடங்கி 10-06-1991 வரையுமாகவுள்ள ஒரு வருடப் போரில் மொத்தம் 1853 நவீன ஆயுதங்கள் உட்பட 2745 ஆயுதங்களையும் இலட்சக்கணக்கான ரவைகளையும் பெருமளவு இராணுவ சாதனங்களையும் வெடிப்பொருட்களையும் கைப்பற்றினோம்.

3000 ற்கும் மேற்பட்ட சிங்களப் படையினரைக் கொன்றொழித்துள்ளோம். இந்த ஒரு வருடப் போரில் எமது தரப்பில் 1306 புலிகள் வீரமரண மடைந்துள்ளனர்.

இந்த ஒருவருடப் போர் தொடர்பானதொரு மதிப்பீட்டை இக்கட்டுரை செய்ய முயற்சிக்கின்றது.

கடந்த ஆண்டு 1990 யூன் மாதம் 10ஆம் திகதி சிறீலங்கா படைகளுடன் ஆரம்பமான போர் ஒரு வயதை அடைந்துள்ளது.

இந்த ஒரு வருடப் போரானது, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பிரதானமானதும், பல மாற்றத் திருப்பு முனைகளை ஏற்படுத்தியதுமான போராக அமைகின்றது.

முன்னெப்போதும் இல்லாதவாறு சிறீலங்காவின் பிடிக்குள் இருந்த தமிழீழத்தின் கணிசமான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. வட தமிழீழத்தின் மிகப்பெரும் பகுதி நிலம் மீட்கப்பட்டுவிட்டது. அங்கே புலிகளின் நிருவாக இயந்திரம் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் முன்னேறிச் செல்கின்றது.

குற்றச் செயல்கள் மிகவும் குறைந்த, அமைதியான வாழ்க்கையை மக்கள் நுகர்ந்துகின்றனர். இங்கே இருக்கக் கூடிய அமைதியையும், இயல்பு நிலையையும் அவ்வப்போது வான்வெளி வரும் போர் விமானங்களாலும், உலங்குவானூர்திகளாலும் மட்டுமே கற்பனையில் கூட குலைக்கக் கூடியதாக இருக்கின்றது.

△ வட தமிழீழத்தில் பலமுடன் இருந்த இராணுவ முகாம்களில் சில தகர்க்கப்பட்டுள்ளன. எஞ்சியவை சுற்றிவளைக்கப்பட்டுள்ளன அல்லது ஒரு பகுதிக்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

△ இங்கே தரைக் கட்டுப்பாட்டை உறுதி செய்ய நடாத்தப்பட்ட இராணுவ ரோந்துகள் ஒழித்து நீக்கப்பட்டுள்ளன.

△ எதிரிகளைக் கதிகலங்க வைக்கும் கரும்புலித் தாக்குதல்கள் அடுத்தடுத்து நிகழ்த்தப்படுகின்றன.

வீரத்தையும், தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வரிப்புலி வீரர்களின் உற்சாக மூன நடமாட்டங்கள் மக்கள் மத்தியில் வெற்றிக்களிப்பை உண்டுபண்ணியுள்ளது. எதிரியின் இராணுவ முகாம்களையும் அழித்து, ஒழிக்கும் போரின் மூலம் தமிழீழ தேசத்தை மீட்கமுடியும் என்ற தன்னம்பிக்கை, இந்த ஒரு வருடப் போரின் வெற்றிகள் ஊடாக மக்கள் மத்தியில் உருவாகியுள்ளன.

தமிழீழத்திற்கு எதிரான இப்போரில் சிறீலங்கா அரசு தனது முழுப்பலத்தையும் பிரயோகித்துள்ளது. தனது இராணுவ இயந்திரத்தை மட்டுமல்ல, போர்க் கருவிகளுடன் பட்டினி, எரிபொருள், மருத்துவம், உற்பத்தித்தடை போன்ற ஆயுதங்களையும் தனது சக்திக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்தியது.

இருந்தும் கடுமையான உழைப்பின் மூலமும், விடாப்பிடியான நம்பிக்கையின் மூலமும் மக்கள் உயிர் வாழப் பழகிக்கொண்டார்கள்.

தமிழீழத்தில் ஒரு பட்டினிச் சாவை எதிர்பார்த்திருந்த சிங்கள அரசு ஏமாற்றமடைந்தது. இந்த வேளை சிறீலங்கா அரசால் தீவிரமாக அமுல் நடாத்தப்பட்ட பொருளாதாரத்தடை, உற்பத்தித்தடைகளுக்குள்ளும் எமது மக்கள் தாக்குப் பிடித்த சரித்திர நிகழ்ச்சியானது தமிழீழ மக்களின் மனதில் ஒரு குறிப்பிடத்தக்க எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, தமிழீழத்தின் மீது ஒரு பூரண உணவு, மருத்துவ எரிபொருட்தடை விதிக்கப்பட்டால் தமிழீழ விடுதலைப்போர் நசுக்கப்பட்டுவிடுவதுடன் தமிழீழ மக்களும் அழிந்துவிடுவார்கள் என்றதொரு பயம் பரவலாக மக்கள் மனதில் குடியிருந்தது.

இந்த ஒரு வருடப் போர் அத்தகைய மனோநிலையை உடைத்தெறிய உதவியிருக்கிறது.

ஒரு புறம் எதிரியுடன் போரில் ஈடுபட்டபடி, மறுபுறத்தில் உற்பத்தி நடவடிக்கைகளில் மக்களை இறக்கி அவர்களுக்கு ஊக்கமும், நம்பிக்கையும் கொடுத்தபடி உணவுற்பத்தியை ஊக்குவித்த புலிகளின் முயற்சி உற்சாக மூட்டக்கூடிய வெற்றியைத் தந்துள்ளது.

இந்த வெற்றியானது எத்தகைய போர்ச் சூழலுக்குள்ளும் எதிரிக்குச் சவால் விடும் வகையில, எமது மண்ணை நம்பி எம்மால் வாழமுடியும் என்ற நம்பிக்கையை மக்கள் பெற்றுள்ளார்கள்.

இது எமது விடுதலைப் போராட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் எமது மக்களின் மனதில் நீண்டகால சிந்தனை மாற்றத்தை இனங்காட்டும் ஒரு சாதகமான அம்சமாக நிலைக்கும் என்லாம்.

10-06-1990 அன்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து எமது போராளிகளை நோக்கித் தீர்க்கப்பட்ட வேட்டொலி தமிழீழமெங்கும் எதிரொலித்தது. அடுத்த சில நாட்களில் அது பெரும் போராக வடிவம் கண்டது.

தமிழீழத்திலிருந்து, சிங்களப் படைமுகாம்களில, ஏறத்தாள அனைத்துமே எமது தாக்குதலுக்கு உள்ளாகின. மிகப் பெரும்பாலான காவல் நிலையங்கள் (பொலிஸ்) எம்மிடம் வீழ்ச்சியடைந்தன. பல இராணுவ முகாம்கள் வெற்றி கொள்ளப்பட்டன. இவற்றிலிருந்து பெருமளவில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. நூற்றுக் கணக்கான படையினரும் கொல்லப்பட்டிருந்தனர்.

தென் தமிழீழத்தில் கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி, கல்முனை, கஞ்சுடா, கிண்ணியா, மூதூர், தோப்பூர் ஆகிய முகாம்களும், வட தமிழீழத்தில் மன்னார்பழைய பாலம் கொண்டைச்சி, கிளிநொச்சி ஆகிய முகாம்களும் தாக்கப்பட்டு அங்கிருந்த படையினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

நாட்செல்லச் செல்ல எதிரி முகாம்களை நிரந்தரமாகவே அழித்த பிரதேசங்களை விடுவிக்கும் முயற்சி தொடங்கப்பட்டது.

இந்த முயற்சிகளின் பிரதான பொருதுகளமாக வட தமிழீழம் விளங்கியது. வட தமிழீழத்திலிருந்த அனைத்துப் படைமுகாம்களுக்கும் அருகில் நின்றபடி நெருக்கடிகளைக் கொடுக்கத் தொடங்கினோம்.

யாழ் - கோட்டை பூரண முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டது. 107 நாள் முற்றுகைப் போரின் உச்சக்கட்டத்தில் சிறீலங்காவின் போர் விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இறுதியில், சுமார் 370 வருட சாத்திரத்தைக் கொண்ட ஆக்கிரமிப்பாளர்களின் இருப்பிடமான யாழ் கோட்டையை 26-09-1990 அன்று கைப்பற்றியதன் மூலம் யாழ் நகர் பிரதேசத்தை விடுவித்தோம்.

அதே போல் கிளிநொச்சி முகாமிலிருந்து எதிரியை விரட்டியடித்ததன் மூலமும், கொக்காவில், மாங்குளம் முகாம்கள் கைப்பற்றப்பட்டதன் மூலமும், வன்னிப்பிராந்தியத்தின் மிகப் பெரும் பகுதியையும் மீட்டெடுத்தோம்.


இதன் மூலம் வட தமிழீழத்தின் தரைக் கட்டுப்பாடு புலிகளின் கைக்குள் வந்துள்ளது. இங்கே பெரும்பலத்துடன், இடைக்கிடை புகமுனைந்த பல சிங்களப்படையணிகள், ஒன்றில அழிக்கப்பட்டுள்ளன அல்லது அடித்து விரட்டப்பட்டுள்ளன.

கொக்குப்படையான், வேப்பங்குளம், வஞ்சியன்குளம், வவுனியா போன்ற இடங்களில் வைத்து நன்கு பயிற்றப்பட்டதும, நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்ததுமான பெரும் படையணிகள் எமது வீரர்களினால் தாக்கி அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

புலிகள் படிப்படியாகப் பெற்ற இந்த இராணுவ மேல் நிலை சிங்கள அரசுக்கு சில உண்மைகளைப் புரியவைத்தது. தரைவழி விநியோகம் சாத்தியமற்றது என்பதுடன் புதிய இராணுவ முகாம்களை அமைப்பது, ரோந்து செல்வது, சிறிய அளவில் தனது படையணிகளை நகர்த்துதல் என்பன சிங்கள அரசுக்கு சாத்தியம் அற்றும் போனது.

வட தமிழீழத்தின் எல்லைப் புறங்களாகிய முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்த தமிழர்பகுதியான மணலாற்றுப் பிரதேசத்துக்கு வெலியோயா எனப் பெயர் சூட்டி அப்பிரதேசத்தில் துரிதகதியில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு குடியேற்றவாசிகள் ஆயுதமயப் படுத்தப்பட்டு வந்தனர்.



18-12-1990 அன்று திருக்கோணமலையில் கண்ணிவெடித் தாக்குதலின் மூலம் கொல்லப்பட்ட திருமலைமாவட்ட சிங்களப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் லக்ஸ்மன் விஜயரட்ணா, திருமலைமாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரிச்சட்விஜயசேகரா மேலும் இரு இராணுவ அதிகாரிகளும் சென்று கொண்டிருந்த "பஜேரோ" வாகனம்.

www.eelamview.com

www.eelamview.com



இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்தி எமது மண்ணைப் பாதுகாப்பதற்கும், இப்பகுதியின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு மணலாற்றுப்பகுதியை தனியொரு நிருவாக மாவட்டமாக்கி எங்களுடைய தீவிர கவனத்தை செலுத்தத் தொடங்கினோம்.

குடியேற்றப் பகுதிகளிலே அமைக்கப்பட்டிருந்த இராணுவ அரண்களைத் தாக்கி அழித்தும், குடியேற்றக் கிராமங்களுக்கு பாதுகாப்புக்கொடுக்கும் நோக்குடன் நடமாடுகின்ற இராணுவ ரோந்துப் பிரிவுகளை இடைநடுவில் மடக்கியும், பதுங்கித் தாக்குதல்களை நடாத்தியும் குடியேற்றத் திட்ட வேலைகளை குழப்பியும் சிங்கள அரசின் தீவிர குடியேற்ற முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றோம்.

இதனால் புதிய புதிய குடியேற்றங்களை அமைத்து துரிதகதியில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவது தடைப்பட்டுள்ளது. முன்னர் நிறுவப்பட்ட குடியேற்றக் கிராமங்களில் இருக்கும் சிங்களவர்கள் மத்தியில பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கியதுடன் இந்த மண்ணில (தமிழர்களின் நிலம்) நீண்ட காலம் குடியிருக்க முடியாது என்ற அவநம்பிக்கையையும் சிங்களக் குடியேற்றவாசிகள் பெறத் தொடங்கியுள்ளனர்.

இதே போன்று மன்னார்ப் பகுதியில் கொண்டைச்சி, கொக்குப்படையான் சிலாவத்துறைப் பகுதியை இராணுவ வலயமாக்கிவிட்டு, மன்னார் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் நீண்டு கிடக்கும் தமிழர் பகுதிகளைச் சிங்களமயமாக்க அரசு எடுத்த நடவடிக்கை சிலாவத்துறைப் பகுதியல நாம் நடாத்திய இராணுவ நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டுவிட்டது எனலாம்.

ஒட்டு மொத்தத்தில் வட தமிழீழத்தின் எல்லையோரங்களில் நடைபெற்றுவந்த புதிய சிங்களக் குடியேற்றங்கள் முற்றாகவே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் புதிதாக எமது மண் பறிபோவதையும் தடுக்க முடிந்துள்ளது.

வட தமிழீழத்தின் கரைப் பகுதியில தனது கட்டுப்பாட்டை இழக்கத்தொடங்கியதும், சிறிலங்கா அரசானது வானிலும், கடலிலும் தனது பிடியை இறுக்கத் தொடங்கி புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நவீன "ரேடர்" கருவிகள் பூட்டிய பெரிய கப்பல்களையும் அதிவேகப்படகுகளையும் பயன்படுத்தி கடலில முள்வேலி அமைத்தது.

சிங்களப்படைகளின் கொடுமைகள் தாங்காது தென் தமிழீழத்திலிருந்து வட தமிழீழத்தை நோக்கி வந்தவர்களில் தமிழீழத்திற்கு அகதிகளாக ஓடிய பல நூற்றுக்கணக்கான மக்கள் அந்தக் கடற் கழுகுகளுக்கு இரையாகினர்.

அதி நவீன சாதனங்களைக் கொண்டிருந்த சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெரிய கப்பல்கள் கடலுக்குள் நங்கூரமிட்டபடி முழுக்கடலிலும் ஏக போகம் செலுத்தியது.

அத்தகைய போர்க்கப்பல்கள் எமக்குச் சவாலாக இருந்தன. இந்தச் சவாலை முறியடிக்கும் முகமாக இப்போர்க் கப்பல்கள் மீது கரும்புலித்தாக்குதல்களை நடாத்தினோம்.

10 - 07 - 1990 அன்று முதற்றடவையாகவும் 4 - 05 - 1991 அன்று இரண்டாவது தடவையாகவும் நாம் நடாத்திய கரும்புலித்தாக்குதல்களால இரண்டு கப்பல்கள் பாரிய சேதமடைந்திருந்தது. அக் கரும்புலித் தாக்குதல்கள் எதிரியின் கடலாதிக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தன.

இதே வேளை தென் தமிழீழத்தில் தமிழர்கள் பாரிய இனப்படுகொலைக்கு உள்ளாகியுள்ளார்கள். இந்த ஒருவருட போரில் கொல்லப்பட்ட சுமார் 7000 தமிழ் மக்களில் 75 வீதமான ஏறக்குறைய 5000 பேர் தென் தமிழீழத்திலேயே கொல்லப்பட்டனர்.

போரின் ஆரம்பத்திலே சிங்களப்படைகள் தென் தமிழீழத்தில்தான் அதிக இழப்புக்களைச் சந்தித்தது. போராட்ட வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு முதற்றடவையாக தென் தமிழீழத்தில 7 இராணுவ முகாம்களும், 16 காவல் நிலையங்களும் கைப்பற்றப்பட்டு பெருமளவு ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் மீட்கப்பட்டன.

கிழக்கின் கையறு நிலை கண்ட சிங்கள அரசு மற்றைய பகுதிகளிலிருந்து பெருந்தொகையில் படைகளைக் கொண்டு வந்து குவித்தது. இதன் காரணமாக அப்பகுதித் தமிழ் மக்கள் தீவிர இனப்படு கொலைக்கு உள்ளானார்கள்.

இத்தமிழினப் படுகொலையில முஸ்லீம் காடையர்களும், முஸ்லீம் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும சிங்களப்படைகளுடன் சேர்ந்து கொண்டு தமிழர்களுக்கு வரலாற்றுத்துரோகம் இழைத்தனர்.

சிங்கள இனவெறிப்படையை விஞ்சக்கூடிய அளவுக்கு கொடூரமான வழிமுறைகளைப் பயன்படுத்தியே முஸ்லீம் கும்பல்கள் தமிழர்களைக் கொன்றார்கள்.

தமிழர்களையும் முஸ்லீம்களையும் மோத விடுவதன் மூலம் தென் தமிழீழப் பகுதியில் இருக்கும் போராட்டத் தளத்தையில்லாமல் செய்யலாம் என்ற எதிரியின் சூழ்ச்சிக்கு பதவி வெறியும், தமிழ் விரோத உணர்வும் கொண்ட முஸ்லீம் காங்கிரஸின் தலைமையும் ஒத்துழைத்தது.

அயலவர்களான முஸ்லீம்களால் அழிவு வருவதைக் கண்ட தமிழர்கள் திகைத்தனர். சிங்களப்படைகளுக்கும் முஸ்லீம் காடையர்களுக்கும் அஞ்சி தங்களது கிராமங்களை விட்டு வெளியேறி காடுகளுக்குள்ளும் அகதி முகாம்களிலும் வாழத்தொடங்கினர்.

ஆனாலும் அகதி முகாம்களுக்குள் அடிக்கடி உட்புகும் சிங்களப்படைகளும், முஸ்லீம் கும்பல்களும் கூட்டம் கூட்டமாக தமிழர்களைப்படுகொலை செய்தனர்.

தென் தமிழீழ தமிழர்கள் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்படும் அதே நேரம் சிங்களக் குடியேற்றங்கள் துரிதப்படுத்தப்பட்டு தமிழர் பகுதிகள் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் உயர்படைத் தளபதிகள் மேற்பார்வையில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன. திருமலை இராணுவத்தளபதி, திருமலை உதவிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை தலைமையாகக் கொண்ட உயர் குழுவொன்று குடியேற்றத் திட்ட முயற்சியை பார்வையிட்டுச் சென்றபோது 18. 12. 1990 அன்று அவர்களது வாசஸ்தலத்தை கண்ணிவெடி வைத்து தகர்த்தெறிந்தனர்.

இத்தாக்குதலில் மேஜர் ஜெனரல் லக்கி விஜயரத்தின உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரிச்சட் விஜயசேகர ஆகியோர் உட்பட 5 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இவர்களது மரணம் திருக்கோணமலைப் பகுதியில் இருந்த குடியேற்றத் திட்டங்களின் தீவிரத்தன்மையை குறைத்துள்ளது. குடியேற்றவாசிகளுக்குள் இது பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக அரசின் குடியேற்ற நடவடிக்கைகள் சிக்கலுக்குள் [illegible]



மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பிற்காக எமது போராளிகள் திட்டமிடுகின்றனர்.

சிங்களப்படையுடனான யுத்தம் நீண்டு செல்லாது இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து பேச்சுவார்த்தை மூலம் அமைதியைக் காணும்படி சர்வதேச நாடுகள் விடுவித்த வேண்டுகோள்களுக்கு மதிப்பளித்து புத்தாண்டில் ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்தோம்.

ஆனால் சிங்கள அரசு எமது நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ளாது போரைத் தொடர்ந்து நடாத்தியது. இந்த இராணுவ மமதையானது சிறிலங்கா அரசின் உண்மை நிலையை சர்வதேச சமூகத்துக்கு துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளது.

அதுவரை காலமும் சிங்கள அரசு அடிக்கடி தன்னை ஒரு சமாதானப் பிரதிநிதியைப் போலவும், புலிகளை யுத்த விரும்பிகள் என்றும் செய்து வந்த பிரச்சாரம் அடிபட்டுப் போனதுடன் போர் வெறி கொண்ட அரசுதான் சிறிலங்கா அரசு என்பது நிரூபிக்கப்பட்டது.

இந்த அரசியல் நிலைப்பாடுகளும் தொடர்ந்து எங்களுக்கு கிடைத்து வந்த போராட்ட வெற்றிகளும் உலக சமுதாயத்தின் கவனத்தை எமது பக்கம் ஈர்த்துள்ளது.

எங்களுடைய மக்களை அழித்தொழிக்க சிங்கள தேசம் காட்டுகின்ற தீவிரமும், அதனைச் செயற்படுத்த அரசு கையாண்டு வரும் குரூரவழிமுறைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை உலகிற்கு துலாம்பரமாக வெளிப்படுத்தியுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் இந்தப் போர் ஆண்டானது எமது போராட்ட வரலாற்றில் நிலையான இடத்தைப் பிடிக்கப் போகும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டதாக அமைந்து விட்டது.



எம்மால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, முற்றாகக் கைப்பற்றப்பட்ட, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கும்புறுமுளை இராணுவ முகாம்.

## ஒரு வருடப்போரில் கைப்பற்றப்பட்டவை

| | |
|---|---|
| பவல் கவச வாகனம் | 01 |
| 50 கலிபர் | 01 |
| ரி - 56 | 81 |
| ரி - 56 - 1 | 132 |
| ரி - 56 - 2 | 260 |
| ரி 81 | 147 |
| எஸ் 84 | 366 |
| எஸ். ஏ. ஆர் | 53 |
| எஸ். எல். ஆர். | 454 |
| எஸ். எம். ஜி | 32 |
| ஜி - 3 | 09 |
| ஜி - 3 சினைப்பர் | 02 |
| எவ். என். சி. | 53 |
| கோல்ட் கொமாண்டோ | 03 |
| 303 | 377 |
| கைத்துப்பாக்கிகள் | 26 |
| வேட்டைத்துப்பாக்கிகள் | 355 |
| ரிப்பீற்றர் | 122 |
| காஸ் கன் | 12 |
| மினி மினி எல். எம். ஜி | 11 |
| உஸ்ரிமாஸ் " " " | 07 |
| ஜி. பி. எம். ஜி | 06 |
| 303 எல். எம். ஜி | 11 |
| ஏ கே. எல். எம். ஜி | 60 |
| ரி. 81 எல். எம். ஜி | 03 |
| ஜி 3 எல். எம். ஜி | 01 |
| எம். ஜி 3 | 01 |
| எல், 3 எல், எம். ஜி | 02 |
| 2 அங்குல மோட்டர் | 08 |
| 60 மி. மி. மோட்டர் | 39 |
| 81 மி. மி. மோட்டர் | 06 |
| 40 மி, மி கிறனைட் பிஸ்ட்டல் | 20 |
| ஆர். பி. ஜி | 33 |

- கொல்லப்பட்ட சிறிலங்காப் படையினர் 3000 ற்கு மேல்
- கைப்பற்றப்பட்ட இராணுவ முகாம்கள் 13
- கைப்பற்றப்பட்ட காவல்துறை நிலையங்கள் 22
- குண்டுவீச்சு விமானம் ஒன்றுசுட்டு வீழ்த்தப்பட்டது.

www.eelamview.com

www.eelamview.com



# இரண்டு தசாப்தங்களும் -

எண்பதுகளில் தமிழீழத்தினதும், சிங்கள தேசத்தினதும் அரசியல் தலைவிதியை அடிப்படைத்து தொண்ணூறுடன் முடிவடைந்த ஒரு முக்கிய தசாப்தத்தின் வரலாற்று நாயகனாக விளங்குகிறார் பிரபாகரன். இப்படியாக பிரபாகரனுக்கு புகழஞ்சலி செலுத்துகிறார் பிரபல எழுத்தாளரும் 'லங்கா கார்டியன்' சஞ்சிகையின் ஆசிரியருமான "மேர்வின் டீ சில்வா"

புயலின் மையமாக நின்று தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வீரன் என்ற காரணத்திற்காக ஒரு தசாப்தத்தின் மாமனிதன் எனப் பிரபாகரன் போற்றப்படுகிறார். "இது எனது தனிப்பட்ட மானசீக மதிப்பீடு அல்ல. இலங்கைத் தீவை அதிரவைத்த பூகம்பமான நிகழ்வுகளின் அடிப்படையில் பார்க்கும்போது இது தவிர்க்கமுடியாத வரலாற்றின் தீர்ப்பு" என்கிறார் மேர்வின்.

எண்பதுகளில் புயலின் வேகத்துடனும், ஆவேசத்துடனும் புலிகள் இயக்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தது என்ற வரலாற்று உண்மையை யாரும் மறுக்க முடியாது. இந்தக் காலகட்டத்தின் வரலாற்றுக் கதாநாயகன் பிரபாகரன் என்பதும் சரியான மதிப்பீடுதான். எனினும், பிரபாகரனதும், விடுதலைப் புலிகளினதும் வரலாறு ஒரு தசாப்தத்திற்குள் மட்டும் அடங்கி நிற்கவில்லை. எழுபதுகளின் ஆரம்பத்தில் தலைதூக்கிய வன்முறை அரசியல் அலைகளுடன் தொடங்கி இன்றுவரை படிமுறை வளர்ச்சியுடன் முன்னோக்கி அசைந்துகொண்டிருக்கும் புலிகளின் வரலாறு கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களை வியாபித்து நிற்கிறது.

இந்த இரண்டு தசாப்த காலகட்டத்தில் தமிழீழ மக்களின் அரசியல் வரலாறு மாபெரும் திருப்புமுனைகளை எதிர்கொண்டது. இந்த வரலாற்றுத் திருப்பங்களும் தேசிய போராட்டத்தில் அவை விளைவித்த பாரிய தாக்கங்களும் விடுதலைப் புலிகளின் வரலாற்றுத் தோற்றம், வளர்ச்சி, எழுச்சியுடன் பின்னிப்பிணைந்து நிற்கின்றன.

எழுபதுகளைக் கொண்ட தசாப்தம் அரச அடக்குமுறையையும் (State Repression) ஆயுத எதிர்ப்புமுறையையும் (Armed Resistance) முனைப்புறச் செய்த காலகட்டம். ஒடுக்குமுறை மோசமாகிச் செல்லும்போது எதிர்ப்புமுறையும் உரம் கொண்டு தீவிரம் பெறுவது இயல்பானது. சகல புரட்சிகரப் போராட்டங்களிலும் இதுவே சரித்திர நியதியாக இருந்து வந்திருக்கிறது. இந்த முரண்பாட்டு நியதியின் அடிப்படையில் இந்த தசாப்த வரலாற்றினை நாம் மீளாய்வு செய்து பார்ப்பது பயனுடையதாக அமையும். அப்பொழுதுதான் ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுத் தேவையையும், புலிகள் இயக்கத்தின் தோற்றத்திற்கான புறநிலைகளையும் நாம் புரிந்துகொள்ளலாம்.


எழுபதின் ஆரம்ப காலகட்ட நிகழ்வுகள் தமிழீழ மக்களின் அரசியல் வாழ்வில் பாரிய தாக்கங்களை விளைவித்தது. இந்தக் காலப்பகுதியில் புதிய மூர்க்கத்துடன் எழுந்த சிங்களப் பேரினவாதம் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தியது. இதன் விளைவாக தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில் நிலவிய தேசிய முரண்பாடு கூர்மையடைந்தது. இதனால் தமிழீழத்தில் வன்முறை அரசியலின் எழுச்சிக்கான திண்ணியமான புறநிலைகள் உருவாகின.

## ஆவேசம் கொண்ட இளம் பரம்பரை

ஏற்கனவே சிங்கள இனவாத ஒடுக்குமுறையின் அழுத்தத்தால் விரக்தியும், கொதிப்பும் கொண்டிருந்த தமிழ் இளம் சமுதாயம்மீது 1970 ஆம் ஆண்டு தரப்படுத்தல் முறை திணிக்கப்பட்டமை எரிகிற புண்ணில் எண்ணெய் ஊற்றுவதுபோல அமைந்தது. உயர் கல்வி வாய்ப்பிற்கும், வேலை வாய்ப்பிற்கும் கதவுகள் அடைக்கப்பட்டதால் தமிழ் இளம் பரம்பரை ஆவேசம்கொண்டிருந்தது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், தொடர்பான எதிர்ப்புகளாக தமிழீழமெங்கும் மாணவர் கிளர்ச்சிகள் குமுறின. இந்தக் கிளர்ச்சிகளுக்கு எதிராக சிங்கள அரசின் ஆயுதப் படையினர் மேற்கொண்ட மிருகத்தனமான அடக்குமுறைகள் இளம் சமுகத்திற்கு மேலும் ஆவேசத்தைக் கொடுத்தது. இந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையில் சிங்கள இனத் துவேசத்திற்கு சிகரம் வைக்குமாப்போல 1972 ஆம் ஆண்டு, மே 22 ஆம் திகதி புதிய குடியரசு அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. திருமதி. பண்டாரநாயக்காவின் தலைமையில், முக்கூட்டு முன்னணியாக (சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி) 1970ல் ஆட்சிப்பீடம் ஏறிய அரசு சிங்களப் பேரினவாதத்தை சட்டரீதியாக ஸ்தாபனமயப்படுத்த முனைந்தது. இந்த நோக்கில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பை இடதுசாரி இயக்கத்தின் தந்தைகளில் ஒருவராக வர்ணிக்கப்பட்ட கொல்வின் ஆர் டி. சில்வா உருவாக்கிக் கொடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் முதன்மையான விசேட அந்தஸ்து வழங்கி முந்திய சோல்பரியின் அரசியலமைப்பில் தமிழருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தரவாதங்களை நீக்கி தமிழரின் நலன்களுக்கு விரோதமான முறையில் உருவாக்கப்பட்ட இந்தப் புதிய அரசியலமைப்பு சிங்கள — தமிழ் தேசிய முரண்பாட்டை மேலும் உலுக்கச்செய்தது.

அரசியலிலும் அவநம்பிக்கை ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மென்முறை வழியைத் தழுவிநின்ற அகிம்சைப் போராட்டம் அன்றைய புறநிலை சூழ்நிலைக்கு ஒவ்வாதது என்ற விழிப்புணர்வும் ஏற்பட்டது. மனிதாபிமானமற்ற, மனித தர்மங்களைக்கு மதிப்பளிக்காத, அடக்குமுறையாளனின் மிருகத்தனமான வன்முறைக்கு எதிராக, மென்முறையான, ஆத்மீக, அறநெறி தழுவிய போராட்ட வடிவம் வெற்றியளிக்கப்போவதில்லை என்பதை தமிழீழ இளம் சமூகம் உணர்ந்துகொண்டது.

இதுவரை காலமும் அமைதி வழியில் நடைபெற்றுவந்த அரசியல் போராட்டம் எழுபதின் ஆரம்பத்தில் வன்முறை தழுவிய போராட்டமாக வெடித்தது. கொலை முயற்சிகள், குண்டுத் தாக்குதல்கள், அரச உடமைகளை நாசம் செய்தல், பேருந்துகளுக்கு தீ வைத்தல், அரச கொடியை எரித்தல் - இப்படியாக பரவலாக அரசியல் வன்முறை குமுறியது. புதிய இனவாத அரசியலமைப்பை ஆதரித்து தமிழ்த் துரோகிகளாக கருதப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் அடிவருடிகளாக செயற்பட்ட



எழுபதுகளில் வன்னிக்காட்டில் ஆயுதபாணியாக நிற்கும் தலைவர் பிரபாகரன்

சிங்கள தேசத்தில் தலைவிரித்தாடிய இனத் துவேச அரசியல், தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர் மத்தியில் புரட்சிகரமான அரசியல் விழிப்புணர்வையும் தீவிரவாத போக்குகளையும் உரம்பெறச்செய்தது

## மென்முறையும் வன்முறையும்

பேயுருவம்பெற்றுவந்த சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்று போராடும் உறுதிப்பாடோ, செயற்திறனோ, தீர்க்கதரிசனமோ,

அடக்குமுறையாளனின் வன்முறையானது மனித உரிமைகளையும், அடிப்படை மனித சுதந்திரங்களையும் நசுக்கி தமிழினத்தை ஒழிப்பதை இலக்காகக் கொண்டதால் அது அநீதியானது, பிற்போக்கானது. வன்முறைக்கு எதிராக அடக்கப்படும் மக்கள் உரிமை கோரி, சுதந்திரம் கோரி, நீதி கோரி மேற்கொள்ளும் வன்முறைப்

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், அரச அடக்குமுறையின் ஏவலாளர்களாக செயற்பட்ட தமிழ்க் காவற்றுறை அதிகாரிகள் ஆகியோர்மீது திட்டமிட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## தன்னிச்சையான வன்முறை

தமிழீழத்தில் தலையெடுத்த வன்முறைப் போராட்டம் சிங்கள அரசுக்கு ஒரு புதிய சவாலாக எழுந்தது. 1971ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் தென்

**இரண்டு தசாப்தங்களும் புலிகளும்** *என்ற தலைப்பில் முத்தமிழ் விழா மலரில் (1991) திரு அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.*

உருப்படியான கொள்கைத் திட்டமோ எதுவுமற்ற பழைய தமிழ்த் தலைமையில் புதிய இளம் சமுதாயம் நம்பிக்கை தளர்ந்தது. பிரித்தானிய காலனித்துவம் திணித்துச்சென்ற பாராளுமன்ற அரசியல முறை சிங்களப் பெரும்பான்மை சர்வாதிகாரத்திற்கு வலுவூட்டி

போராட்டம் முற்போக்கானது. நியாயமானது. இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வன்முறை அரசியல் போராட்டத்தில் குதிக்க புரட்சிவாதத் தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர்.

னிலங்கையில் வெடித்த ஜே. வி. பி யினரின் ஆயுதக் கிளர்ச்சியை வெற்றிகரமாக நசுக்கி பதினையாயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்றுகுவித்த பண்டாரநாயக்கா அம்மையார் தமிழீழத்திலும் அரச அடக்குமுறையை முடுக்கிவிடத் தயங்கவில்லை. அரச ஆயுதப் படையினரால் தமிழ் இளை

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளும்

ஞர்கள் வேட்டையாடப்பட்டனர். விசாரணையின்றி சிறையில் தள்ளப்பட்டனர். மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். கொலைசெய்யப்பட்டனர். இந்தக் கொடுமை காரணமாக பல தீவிரவாத இளைஞர்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. ஆயினும் வன்முறை அலை ஓயவில்லை.

தமிழ் இளைஞர்களின் வன்முறைப் போராட்டம் ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத் திட்டத்தைக்கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பு மூலம் நெறிப்படுத்தப்படவில்லை. தனி நபர்களாகவும், ஒரு சிலரைக்கொண்ட குழுக்களாகவும், தன்னிச்சையான போக்கில் வன்முறையில் இறங்கிய இளைஞர்களுக்கு அனுபவமோ, ஆயுதம், வெடிமருந்துகள் பற்றிய அறிவோ, பயிற்சியோ, போர் யுக்தி, போர் முறைத் திட்டங்கள் பற்றிய தெளிவோ இல்லாததால் பெரும்பாலான வன்முறை முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. எனினும், விடுதலையுணர்வும், தேசியப் பற்றுணர்வும், அரச ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசமும், புரட்சிகரப் போர்க்குணமும் இந்த இளைஞர்கள் மத்தியில் மிகுந்து காணப்பட்டது.

## பிரபாகரனின் புரிந்துணர்வு

வன்முறை அரசியலில் ஆர்வம்கொண்ட இந்தப் புரட்சிவாத இளைஞர்கள் அனைவருமாகத் தமிழ் மாணவர் பேரவையினை அமைத்துக்கொண்டனர். சத்தியசீலன் என்ற பட்டதாரி மாணவன் தலைமையில் இந்த அமைப்பு இயங்கிவந்தது. சிவகுமாரன், பிரபாகரன், தங்கத்துரை போன்றோர் இந்த அமைப்போடு தொடர்பு கொண்டு இயங்கிவந்தனர்.

செயல்திறனற்ற தலைமை காரணமாக இந்த அமைப்பு செம்மையாக செயற்படவில்லை. சத்தியசீலன் இளைஞர்களை வன்முறைக்கு தூண்டிவிட்டாரே தவிர களத்தில் இறங்கத் துணியவில்லை. புரட்சிகர கொள்கைத் திட்டமோ, செயற்பாடோ இல்லாததினாலும் ஆயுதப் போராட்டம்பற்றிய தெளிவு இல்லாததினாலும் வன்முறை நிகழ்வுகள் மாறி மாறித் தோல்விகண்டதாலும் பேரவைத் தலைமைமீது விரக்தியடைந்த பிரபாகரன் தனித்தியங்கமுடிவுசெய்தார்.

ஏதேச்சையாக, கட்டுப்பாடற்ற முறையில், திசையின்றி பிரவாகமெடுத்த வன்முறை எழுச்சியானது இளைஞர் சமூகத்தின் இருக்குமுறலை வெளிப்படுத்தியதே தவிர மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என்பதை பிரபாகரன் புரிந்துகொண்டார். தேசிய விடுதலையை இலட்சியமாக வரித்த கொள்கைத் திட்டத்துடன் ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்ட அமைப்பு கட்டி எழுப்பப்படவேண்டியதன் வரலாற்றுத் தேவையையும் அவர் நன்கு உணர்ந்துகொண்டார்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத்திட்டம் ஆகியவற்றைக்கொண்ட ஒரு புரட்சிகர விடுதலை அமைப்பைக் கட்டி எழுப்பி, தீர்க்கமான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டுமென உறுதிபூண்ட பிரபாகரன் 1972 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். வீரமும், அர்ப்பணிப்பும், விடுதலையுணர்வும் மிகுந்த புரட்சிகர இளைஞர்கள் பிரபாகரன் பின்னால் அணிதிரண்டனர்.

## புதிய தமிழ்ப் புலிகள்

1972 ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் இந்த அமைப்பை உருவாக்கிய பிரபாகரன், அவசரப்பட்டு களத்தில் குதிக்காமல், ஆரம்ப காலத்தை, தனது தோழர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதிலும் போர் முறைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதிலும் செலவளித்தார். அன்றைய யதார்த்த சூழ்நிலையையும், தமிழீழத்தின் பூகோள தன்மையையும் எதிரியின் இராணுவப் பலத்தையும் கருத்தில்கொண்டு நீண்டகால கெரில்லா (கரந்தடி) போர்முறையின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதே பொருத்தமானதென பிரபாகரன் முடிவுக்கு வந்தார். ஆரம்ப காலத்திலிருந்தே 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற இலட்சிய வரிகளைப் புனைந்த பிரபாகரன் தமிழீழ தாயகத்தைமீட்டு, சுதந்திர தனியரசு அமைப்பதையே புலிகள் இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாக வரித்துக்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் தோற்றமானது எழுபதுகளைக்கொண்ட தசாப்தத்தின் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகவும், தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு மாபெரும் திருப்புமுனையாகவும் அமைந்தது. திசை தெரியாது அலைமோதிய வன்முறை எழுச்சியிலிருந்து ஒரு திண்ணியமான நீண்டகால ஆயுதப் போராட்டத்திற்கான உறுதியான அத்திவாரத்துடன் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்தது. புலிகளின் பிறப்போடு புரட்சிகரமான ஒரு புதிய வரலாறும் பிறந்தது.

## தமிழாராய்ச்சி மாநாட்டு கொலைகள்

1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் இனத்துவேச அரசியலின் அசிங்கமான வெளிப்பாடாக அமைந்தது. தமிழரின் கலாச்சார வாழ்வை சிதைக்கவும் சிங்கள அரசு தயங்காது என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டியது. இச்சம்பவம் தமிழீழ மக்கள் மனதில் என்றுமே மாறாத ஒரு வடுவை ஏற்படுத்தியதோடு இனமுரண்பாட்டை மேலும் இறுக்கச் செய்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாது தடுக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு பகீரத முயற்சிகளை செய்தது. இறுதியில் சிங்களப் பொலீஸாரை ஏவி மாநாட்டைக் குழப்பியது. இந்தச் சம்பவத்தில் 9 அப்பாவித் தமிழர்கள் கொலையுண்டனர். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு சூத்திரதாரியாக விளங்கியவர் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவாகும். சுதந்திரக் கட்சியின் வடமாகாண பிரதான அமைப்பாளராக இயங்கிய துரையப்பா, அரசின் அடிவருடியாக இருந்து தமிழ்த் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார். தமிழ்த் தீவிரவாத இளைஞர்களை அரசுக்கு காட்டிக்கொடுத்தார். தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு சிங்களப் பொலீஸாரை ஏவிவிட்டதற்கும் இவரே காரணகர்த்தாவாக விளங்கினார். இந்த இனத்துரோகியை அழித்து சிங்கள அரசுக்கு ஒரு பாடம் புகட்ட பிரபாகரன் முடிவுசெய்தார்.

இதற்கிடையில், தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளால் கொதிப்படைந்த சிவகுமாரன் அல்பிரட் துரையப்பாவையும், உதவிப் பொலீஸ் அதிபர் சந்திரசேகராவையும் குண்டு வைத்து கொலைசெய்ய மேற்கொண்ட பகீரத முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் பொலீஸாரால் தீவிரமாக வேட்டையாடப்பட்டு வந்த சிவகுமாரன் 1974 ஜூன் 5ந் திகதி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான். விடுதலை உணர்வும், வியப்புமிக்க துணிச்சலும், விடாமுயற்சியும் கொண்ட மகத்தான ஒரு விடுதலை வீரனை இழந்து தமிழீழமும் துயரில் ஆழ்ந்தது.

> ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத்திட்டம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு புரட்சிகர விடுதலை அமைப்பை கட்டி எழுப்பி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க 1972ல் தலைவர் பிரபாகரன் உறுதிபூண்டார்
>
> வீரமும், அர்ப்பணிப்பும், விடுதலை உணர்வும் மிக்க புரட்சிகர இளைஞர்கள் அவரின் பின்னால் அணிதிரண்டனர்

## துரையப்பா சுட்டுக் கொலை

பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் திட்டமிட்டபடி செயலில் குதிக்கிறார்கள். தமிழினத்தின் பெரும் துரோகியான அல்பிரட் துரையப்பா 1975 யூலை மாதம் 27ந் திகதி பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்படுகிறார்.

அல்பிரட் துரையப்பா கொலையுண்ட நிகழ்வு சிங்கள அரசுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழரின் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முயலும் தமிழ்த் துரோகிகளுக்கு இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழீழத்தில் நிலைகொள்ள முனைந்த முயற்சிகளுக்கும் இந்தச் சம்பவம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. சிங்கள இனவாத அடக்குமுறைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தின் முதலாவது அத்தியாயத்தை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துவைத்தனர். எழுபதுகளில் தமிழீழத்தை அதிரவைத்த முதலாவது ஆயுதப் போர் நடவடிக்கையை வெற்றிகரமாகச் செயற்படுத்தி விடுதலையை நோக்கிய நீண்ட கடினமான வரலாற்றுப் பயணத்தை தொடக்கிவைத்தார் பிரபாகரன்.

1976 ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இராணுவ அமைப்பையும் அரசியல் அமைப்பையும் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகள் தமது வளர்ச்சிப் பாதையில் வீறுநடைபோட்டனர். அன்று மலர்ந்துகொண்டிருந்த எமது விடுதலை இயக்கத்திற்கும், தமிழர்களின் தேசியப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியது தமிழ்ப் பொலீஸ் உளவுப் படையாகும். இந்த உளவுப் படையுடன் சேர்ந்து சிங்கள அரசின் கைக்கூலிகளாகக் காட்டிக்கொடுப்போரும் இனத்துரோகிகளும் இயங்கினர். தமிழீழத்தில் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு வளரவிடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியுடன் எதிரியின் கைப்பொம்மைகளாக இவர்கள் செயற்பட்டனர். எனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால கெரில்லா நடவடிக்கைகள் பொலீஸ் உளவுப் படையை சிதைப்பதோடு, காட்டிக்கொடுக்கும் கயவர்களையும், இனத்துரோகிகளையும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

## தனியரசுக் கோரிக்கை

பாராளுமன்றத்திற்குப் புறம்பாக தமிழீழத்தில் தலைவிரித்தாடிய அரசியல் வன்முறை எழுச்சியும், புலிகள் இயக்கமாக உருவம்பெற்ற ஆயுத எதிர்ப்பு இயக்கமும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அச்சுறுத்தலையும் நெருக்குதலையும் கொடுத்தது. பாலைவனத்தில் எழுப்பும் குரல்கள் போல பாராளுமன்றத்தில் விடும் அறிக்கைகளில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதை தமிழீழ மக்கள் உணர்ந்துகொண்டனர். சமஷ்டி கோரி நடத்திய சாத்வீகப் போராட்டங்களும் பயனற்றுப்போய்விட்டதையும் மக்கள் உணராமல் இல்லை. தீவிரமடைந்துசென்ற சிங்கள இனவாத ஒடுக்குமுறையும் அதன் எதிர்வீச்சாக தமிழீழத்தில் உருவாகியுள்ள புரட்சிகர புறநிலைகளும், ஒற்றையாட்சியைக் கைவிட்டு தனிநாட்டு உரிமையை வென்றெடுக்க வேண்டுமென மக்கள் மத்தியில் எழுந்துள்ள புதிய அரசி

(10 ஆம் பக்கம் பார்க்க)



எழுபதுகளில் வன்னிக் காட்டில் தலைவர் பிரபாகரனிடம் பயிற்சி பெறும் எமது ஆரம்பகால உறுப்பினர்கள்

www.eelamview.com

www.eelamview.com



# கரும்புலிகள்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகடலைக் கொண்ட ஆழமான சமுத்திரத்துக்குள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்திசாதுரியமாக மீறி, வெடிமருந்துப்படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரேயே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒருமுறை கப்பலைச் சுற்றிவந்து, குறித்த இலக்கின்மீது மோதி, வெடிமருந்துப்படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்ய முடியாதவை. இதைச்செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக்கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும்கூட பதட்டமின்றி, உறுதியுடன், குறிபிசகாது எதிரியைத்தேடி ஓடும் வீரம் தேவை. விவேகம் தேவை. வரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தன்னை அழித்துக்கொள்ள முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது. அல்லது, எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது. அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு தேசியத்தின் இயக்க சக்திக்கு உந்துவிசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றிகொள்ளப்பட முடியாததும், உலகின் எந்த தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததுதான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல. எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப் போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக்கொள்ளும்போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளிவிடுவதுடன், வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட, தமிழ்ச் சமூகம் ஒன்றுக்குத் தேவையான உணர்வையும் ஊட்டிவிடுகின்றது.

தேச பக்தியையும், வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன் சுதந்திரத்துடனும், கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களை கரும்புலி அணியில் இணைத்துக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும், கரும்புலித்தாக்குதலுக்கான திட்டம் திட்டப்படும் போது தன்னைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித்தாக்குதலுக்கு தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதிய தொன்றாகும்.

களம் புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரசாதனைகள், சிங்களப் படைகளுக்கு கிலியையுண்டு பண்ணுகின்ற அதேசமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு கொடுக்க இருக்கும் சமூகத்தாக்கம் எதிர்கால தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கப்போகின்ற சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

## ஒரு போராளி...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் முகாம் முழுவதும் உன்னைப் பார்த்து ரசித்துச் சிரிக்கும். இந்தியப்படைகள் எங்களைச் சுற்றி ஒரு வலையத்தை அமைத்து, எங்களை நெருங்கிய பொழுதும், நாங்கள் காடுகளிற்குள் மகிழ்ச்சியாக இருந்தோம். போராட்டத்தில் நம்பிக்கையோடு இருந்தோம் என்பது, இந்தியர்களுக்கு தெரிந்திருக்குமோ தெரியாது.

உனது காயம் சுகமானது. அந்த நேரத்தில் முல்லைத்தீவு பிரதேசத்து மக்கள் இந்தியப் படைகளால் அடித்து விரட்டப்பட்டு, காடுகளிலும், வயல்களிலும் தஞ்சமடைந்து வாழ்ந்தனர். நீயும் அவர்களுடன் கலந்து நின்றாய். நீயும், உனது தோழர்களும் அந்த மக்களுக்கு போராட்டத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தினீர்கள். போராட்டத்தின் தேவையைப்பற்றி, இந்த மண்ணின் விடுதலையைப்பற்றி, இந்திய ஆக்கிரமிப்பின் நோக்கத்தைப்பற்றியெல்லாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தினீர்கள். அந்த உண்மையை விளங்கிக் கொண்டு மக்கள் எங்களை அரவணைத்ததால்தான் ஆக்கிரமிப்பாளனுக்கு இந்த மண் அடிபணியாது - தலை நிமிர்ந்து கொண்டது.

அந்த நாட்களில் தான், நீ கிளிநொச்சி மாவட்ட அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். முல்லைத்தீவு மாவட்டத்து மக்களின் கண்கள் உன் பிரிவைத் தாங்காது தவித்தன. ஆனால் உன் முன் இருந்தது பெரும் கடமை. நீ கிளிநொச்சிக்கு சென்று அரசியற் பிரிவை ஒழுங்குபடுத்தி விஸ்தரித்திருந்தாய். உனது திறமையான செயற்பாடுகள் அந்த மாவட்டத்திலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியது. அந்த நேரங்களில் இரண்டு மூன்று தடவைகள் இந்தியப் படைகளின் சுற்றிவளைப்புக்களிலிருந்தும் நீ தப்பிக் கொண்டாய்.

வன்னிமாவட்ட அரசியற் பொறுப்பாளராக இருந்த, மாறன் அண்ணாவின் இழப்பின் பின்பு நீ வன்னிமாவட்ட அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். அந்த நேரத்தில் தான் இந்தியப் படை இந்த மண்ணை விட்டு வெளியேறியது. நீ வன்னி முழுவதும் அரசியற் பிரிவை ஒழுங்கு படுத்தி வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண்டாய். புதிதாய்ப் பிறப்பெடுத்த எமது கட்சி அமைப்பும் அந்த நேரங்களில் பலப்பட்டுக் கொண்டது. அந்த நேரங்களில், நாங்கள் நடாத்திய பேரணிகளில், கூட்டங்களில், உனது பேச்சை மக்கள் விரும்பிக் கேட்டார்கள் உன்னால் எப்படி இவ்வளவு இலகுவாக - தெளிவாக எல்லா மக்களையும் கவரக் கூடிய மாதிரி பேசமுடிகிறது என்பது எங்களுக்கு வியப்பாகவே இருக்கும்.

சிறீலங்கா இராணுவத்தினருடனான சண்டை மீண்டும் தொடங்கியபோது நீ எங்காவதொரு தாக்குதற் களத்தில் தான் நிற்பாய் என்பது எல்லோருக்குமே தெரியும். அப்படித்தான் நீயும் நின்றாய்.

கொக்காவில் இராணுவ முகாம் மீதான தாக்குதலிலும் நீ கலந்து கொண்டாய். அந்த முகாமை நாங்கள் வெற்றி கொண்டோம். ஆனால், அங்குதான் உனது அடிவயிற்றில் துப்பாக்கிக் குண்டு தாக்கியது.

சந்திரன் நீ எங்கள் வைத்தியசாலை ஒன்றில் இடந்தாய். உன் விழிகள் நீ தப்பிக் கொள்வாய் என்ற நம்பிக்கையை தரவில்லை.

உன் உறுதியான கறுத்த தேகம் வாடிப்போய்க் கிடந்தது.

கலங்கிய விழிகளுடன் நாங்கள் காத்திருந்தோம்.

சில வாரங்கள் சென்றன, நீ கண்விழித்தாய் ஆனால், உன் கால்கள் இனி வழங்காது என்றார்கள். கால்கள் இல்லாத சந்திரனை எங்களால் கற்பனை கூடச் செய்யமுடியாது. சந்திரன், ஆடாமல், பாடாமல், ஓடாமல் நீ இருக்கவே மாட்டாய். நாங்கள் தவித்தோம் கலங்கி நின்றோம். ஆனால் நீ கலகலப்பாக இருந்தாய். உனது நிலை உனக்குத்தெரிந்த பின்பும் உற்சாகமாக இருந்தாய்.

சந்திரன் நீ வைத்தியசாலைக் கட்டிலிலிருந்து கொண்டே.

" நான் இங்கையும் அரசியல் வேலை செய்கிறன் இங்கு வருகிற தாதிகளுக்கும், வைத்தியர்களுக்கும் ஏன் என்னை இந்தக் கதவுகளால் எட்டிப்பார்க்கும் ஒவ்வொருவருக்கும் இந்த மண்ணில் ஏன் ஒரு போராட்டம் நடக்கிறது என சொல்லிக்கொண்டிருக்கிறேன் " என்றாய். உண்மைதான் நீ இருந்த சோகம்பாடும், அந்த வைத்தியசாலை கூட கலகலப்பாக மாறிப்போனது.

சந்திரன் நடக்கத்தேவையில்லை, அவன் இருந்தாலே போதும். போராடுவான் — போராட்டத்திற்குப் பங்களிப்பான் என எங்கள் மனங்கள் எண்ணிக்கொண்டன.

அதன் பின்பு.

நீயும், உனது தோழர்களும் வைத்திய வசதியைத் தேடிக் கடலில் பயணம் போனதாக கேள்விப்பட்டோம். உண்மையில் உங்களுக்கு என்ன நடந்ததென்பது எங்களுக்குத் தெரியாது. கடலிற்குள் தோன்றிய சிங்கள மிருகங்கள் உங்களைக் கவ்விக்கொண்டிருக்கும். உனக்கு நீந்தத்தெரியும். நீ கைகளால் நீந்த முயன்றிருப்பாய். வழங்காத உனது கால் உன்னை கீழே, கீழே இழுத்திருக்கும் கடல் உன்னை மூட ஒரு கணம் தயங்கி இருக்கும். மூடிய பின்பும் ஏற்றுக்கொள்ள முடியாமல் குமுறி இருக்கும். வன்னி மக்களின் மனங்களின் கொந்தளிப்பைப் போலவே, கடலும் உன்னை அணைத்த பின்பு வேதனை தாளாது கொந்தளித்திருக்கும்.

தோழர்கள்

## இரண்டு தசாப்தங்களும் புலிகளும்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் விழிப்புணர்வும் தமிழ் அரசியல்வாதிகள்மீது ஒரு புதிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

ஒப்பந்தங்கள் செய்து உடன்பாடுகள் செய்து ஒத்துழைப்புச் செய்து எல்லா வகையிலும் நெகிழ்ந்துகொடுத்தும் சிங்கள ஆளும் வர்க்கத்தால் மாறி, மாறி ஏமாற்றப்பட்ட கசப்பான வரலாற்று அனுபவமும் தமிழ்த் தலைவர்களை உறுத்தியது. தமிழீழத்தில மேலோங்கி நின்ற தன்னாட்சி உரிமைக்குரலுக்கு செவிசாய்க்க மறுத்தால் அது அரசியல் தற்கொலையில் முடியும் என்பதையும் அரசியல் தலைவர்கள் உணர்ந்தனர். இவ்வாறான வரலாற்று நிர்ப்பந்தங்களால் நெருக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்திசைவாக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசுக் கோரிக்கையை முன்வைக்க முன்வந்தனர்.

1976 ஆம் ஆண்டு மே மாதம் வட்டுக்கோட்டையில் நிகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் "தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திரமான, இறைமையுடைய மத சார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற தமக்கு மனுத் தருமாறு கோரி, 1977 யூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டணியினர் தமிழ் மக்களை வேண்டிக் கொண்டனர். தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்கள் தமிழீழ தேசிய நிர்ணய அவையாகச் செயற்பட்டு, தமிழீழ அரசுக்கான யாப்பு ஒன்றைத் தயாரித்து தமிழீழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுவோம், எனவும் கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனம்செய்தனர். சர்வசன வாக்கெடுப்புப்போல நிகழ்ந்த இத் தேர்தலில் தமிழீழ மக்கள் தமது அரசியல் அபிலாசை என்ன என்பதை தெட்டத்தெளிவாகத்தெரியப் படுத்தினர். அமோக வெற்றியை ஈட்டிய கூட்டணியினர் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையை இங்கு விபரிக்கத் தேவையில்லை.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை வெறும் தேர்தல் கோஷமாக கூட்டணியினர் பயன்படுத்தியமை தமிழீழ மக்களுக்கு இழைத்த மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையான தன்னாட்சி உரிமையை கொச்சைப்படுத்தும் வகையில் கூட்டணியினர் அரங்கேற்றிய இந்த அரசியற் துரோக நாடகம் தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தை பின்னடைவுக்குள் தள்ளியது.

1977 தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் பதவியேற்ற ஜே. ஆரின் ஆட்சிபீடம் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்வதுபோல ஒரு பயங்கர இனக் கலவரத்தை கட்டவிழ்த்துவிட்டது. இந்தச் சிங்கள இனவாதப் பேயாட்டத்தில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போதும் கூட்டணித் தலைவர்கள் செயலிழந்துபோய் தமது பாராளுமன்ற நாற்காலிகளைமட்டும் இறுக்கப் பற்றியபடி இருந்தனர். இந்தச் சம்பவத்தோடு அடுத்து, கூட்டணித் தலைமை தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து முற்றாக அந்நியப்பட்டு நின்றது. இந்த வெற்றிடத்தை நிரப்புவதுபோல விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முனைப்புறத் தொடங்கியது. அரசின் அடக்குமுறை கருவிகளாகச் செயற்பட்டு தமிழ் மக்களின் போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கிய பல இரகசியப் பொலீஸ் அதிகாரிகளையும் இனத் துரோகிகளையும் எமது இயக்கம் அழித்தது.

(தொடரும்)

www.eelamview.com

www.eelamview.com



# தமிழீழத் தேசிய விருது வழங்கப்பட்ட எட்டு மாமனிதர்கள்



திரு. காசி ஆனந்தன்
போராட்ட
இலக்கியங்களுக்காக.



மறைந்த
திரு. ஆ. இராசரத்தினம்
விடுதலைப் போராட்டப்
பங்களிப்புக்காக.




திரு. திருநாவுக்கரசு
நாடகத் துறைக்காக.



திரு. கலைஞானி
தமிழீழத்தில் அரும்பொருள்
தொல்பொருள் பாதுகாப்பிற்காக



திரு. சிவஞானசுந்தரம்
பத்திரிகை வெளியீட்டுத்துறைக்காக



திரு. நடராசா
விடுதலைப் போரிற்கு ஆற்றிய
உறுதியான பங்களிப்புக்காக



வீரமரணமடைந்த
திரு. பொ. அருணாசலம்
போராட்டத்திற்காக ஆற்றிய
உயிரை மதியாத தீரச்செயலுக்காக



இனத்துரோகிகளால் சுட்டுப்
படுகொலை செய்யப்பட்ட
திரு. க. சிவானந்தசுந்தரம்
தமிழீழ மக்களுக்கு ஆற்றிய
பணிக்காக.

## தமிழர் தேசியம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை எழுச்சியின் முக்கியத்துவத்தை விளக்கிய தலைவர், " மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிடமுடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது. ஏனென்றால் விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் இதுவே. சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்கு சாவையும், அழிவையும் தாங்கொணாத் துயரையும் கொடுத்தபோதும் என்றுமில்லாதவகையில் தேசியப் பற்றுணர்வையும் சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கிறது. " என்று கூறினார்.

தமிழீழம் தனித்ததொரு தேசம் என்பதை பிரகடனம் செய்யும் நோக்கமாகவும், தேசியத் தொண்டு ஆற்றிய தேச பக்தர்களுக்கு தமிழீழ தேசியம் சார்பில் கௌரவம் அளிக்கப்படவேண்டும் என்பதற்காகவும் முதற்றடவையாக தேசிய விருதுப் பட்டமளிப்பு முத்தமிழ் விழாவின் முக்கிய அம்சமாக இடம் பெற்றது. தேசிய விருதுகளை வழங்குவதற்கு முன்னராக எமது தலைவர் பிரபாகரன், " தமிழீழ மண்ணின் விடிவிற்காக, தமிழீழ மக்களின் விமோசனத்திற்காக, தமிழீழ தேசியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காக உழைத்தோரும் உழைத்துவருபவர்களுமான உன்னத மனிதர்களே, உண்மையான மண்ணின் மைந்தர்கள் " என வெகுவாகப் பாராட்டினார்



எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள், கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும்பழுவை பொதுமக்களே சுமந்து வருகிறார்கள். சாவும் அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தை சொற்களில் சித்தரிக்கமுடியாது.

— தலைவர் பிரபாகரன்

" நற்பணி ஆற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிப்பதும், கௌரவம் செலுத்துவதும் தமிழரின் பண்பாடு. இந்த சீரிய மரபிற்கு ஏற்ப இந்த சிறப்பு வைபவத்தை ஒழுங்குசெய்த எமது இயக்கத்தின் கலை, பண்பாட்டுக் கழகத்தினருக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழீழ தேசத்தின் அதியுயர்ந்த கௌரவமாக தேசிய விருது வழங்கி இங்கு கௌரவிக்கப்படுபவர்களை நாம் மாமனிதர்கள் என மதிப்பளிக்கிறோம். ஏனென்றால் இவர்கள் அனைவரும் அற்புதமான இலட்சியவாதிகள். இனப்பற்றும், நாட்டுப்பற்றும் உடைய தேசாபிமானிகள். சுயநல வாழ்வின் குறுகிய வட்டத்திற்கு அப்பால் நின்று சமூக நலத்திற்காக, தேசிய நலத்திற்காக, மக்கள் நலத்திற்காக சேவையாற்றிய அபூர்வ மனிதர்கள். இவர்களது அறி[illegible]



மாமனிதர் திரு. நடராசா அவர்களுக்கு தலைவரால் தேசிய விருது வழங்கப்படுகிறது.

செயலாற்றல் அனைத்துமே தமிழீழ சமூகத்தின் மேன்மைக்கு உரமூட்டுவனவாக அமைந்திருக்கிறது. இவர்களது பணி மேலும் தொடர வேண்டும். இவர்களது தொண்டு மேலும் சிறக்க வேண்டும். இதனால் தான் இவர்களுக்கு பெரும் மதிப்பளித்து, தேசிய விருது வழங்கி கௌரவிக்கத் தீர்மானித்தோம் " என்று கூறினார் தலைவர் பிரபாகரன்.

முத்தமிழ் விழாவின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்ட போது " இன்று நாம் கொண்டாடுகிறும் முத்தமிழ் விழா எமது மக்களது தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். போராட்ட சூழலில், எல்லைகளில் எதிரியின் போர்முரசு கேட்கும் யுத்த காலத்தில் சமுத்திரம் போல திரண்டுவந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்குகொள்கிறார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப்பாட்டை, சுதந்திர அறைகூவலை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்த சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும் சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது. " என்றார் தலைவர்.

www.eelamview.com

www.eelamview.com



கரும்புலி

**கப்டன் மில்லர்**

(வசந்தன்)

துன்னாலை

05.07.1987 அன்று நெல்லியடி இராணுவ முகாம் தாக்குதலின்போது...



கரும்புலி

**மேஜர் காந்தரூபன்**

(ரூ. கோணேஸ்வரன்)

வல்வெட்டித்துறை

10.07.1990 அன்று வல்வெட்டித் துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...



கரும்புலி

**கப்டன் கொலின்ஸ்**


(ப. சில்வெஸ்டர்)

மன்னார்

10.07.1990 அன்று வல்வெட்டித்துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...

# வீர வணக்கம்

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகில் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகில் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும் தான் எங்களது கரும்புலிகளின் மனோ பலம். அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு தேசியத்தின் இயக்கு சக்திக்கு உந்து விசையாக விளங்கும் ஒரு உயரிய அரசியல் போர் வடிவம்தான் கரும் புலிகள்.



கரும்புலி

**கப்டன் வினோத்**

(வே. திலகராஜா)

வல்வெட்டித்துறை

10.07.1990 அன்று வல்வெட்டித்துறையில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின்போது...



கரும்புலி

**லெப். கேணல் போர்க்**

(மா. அரசரத்தினம்)

சேமமடு

23.11.1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலின்போது...



கரும்புலி

**மேஜர் டாம்போ**

(கா. தயாபரன்)

முழங்காவில்

19.3.1991 அன்று சிலாபத்துறை இராணுவ முகாம் தாக்குதலின்போது...



கரும்புலி

**கப்டன் சிதம்பரம்**

(பெ. சந்திரன்)

வல்வெட்டித்துறை

4.5.1991 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின் போது...



கரும்புலி

**கப்டன் ஜெயந்தன்**

(ச. பத்மநாதன்)

முறக்கொட்டாஞ்சேனை

4.5.1991 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலின் போது...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com